

# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள்

மறவன்புலவு
க. சச்சிதானந்தன்

# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள்


## மறவன்புலவு க. சச்சிதானந்தன்

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்குழுத் துணைச்செயலாளர், தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுத் தொடக்கச் செயலாளர்; தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடுவண் குழு உறுப்பினராக இருந்தவர், அறவழிப் போராட்டக் குழு நிறுவனர்; அகில இலங்கை இந்து மாமன்ற ஆட்சிக்குழு உறுப்பினர்; இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நடுவண் குழு உறுப்பினர், கொழும்பு கடற்றொழில் திணைக்கள ஆய்வு அலுவலராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் 23 நாடுகளில் ஐ. நா. உணவு வேளாண்மை நிறுவன ஆலோசகராகவும் பணிபுரிந்தவர்.



*காந்தளகம்*

4, முதல் மாடி, இரகிசா கட்டடம், 68, அண்ணா சாலை, சென்னை 600002

தொலைப்பேசி 0091 44 28414505

*மின்னஞ்சல்: tamilnool@tamilnool.com, மின்னம்பலம்: www.tamilnool.com*

உரிமை பதிவு
முதற் பதிப்பு மார்கழி 2046 (10.01.2016)
அதபுஎ ISBN 978-81-897-0863-4
விலை: ரூ. 120

பொருளடக்கம்

1. ஒன்பது படுகொலைகள் 5
2. பண்பாட்டு ஊர்தி நகர்வலத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தோர் 14
3. எனது யாழ்ப்பாணமே! 17
4. யாழ்ப்பாண மாவட்ட நீதவானின் விசாரணை அறிக்கை 50
5. யாழ்ப்பாணக் குடிமக்கள் குழு விசாரணை அறிக்கை 68

அச்சிடல் தயாரிப்பு:
**காந்தளகம்**, 4 முதல் மாடி, இரகிசா கட்டடம்,
68 அண்ணா சாலை, சென்னை 600002,
தொலைப்பேசி: 0091 44 28414505,
மின்னஞ்சல்: tamilnool@tamilnool.com,
மின்னம்பலம்: www.tamilnool.com

# சாதனையும் வேதனையும்



திபி. 2004 (கிபி 1973) ஆனியில் ஒரு நாள் நடுப்பகல். திரு. ஜேம்சு இரத்தினம் என்னைத் தொலைப்பேசியில் அழைத்தார். அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளைக் கூட்டத்துக்கு வருமாறு அழைத்தார்.

பம்பலப்பிட்டி, மிலாகிரியா நிழற்சாலையில் திரு. கே. சி. தங்கராசா அலுவலகத்தில் நடந்த கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். நீதியரசர் கலாநிதி எச். இட பிள்யூ. தம்பையா தலைவர். எனக்குத் தெரிந்த பலர் உறுப்பினர்கள். 1968 தொடக்கம் நான் உறுப்பினன்.

யாழ்ப்பாணத்தில் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்தும் பொறுப்பு எம்மில் சிலருக்கே வந்து சேரும் என 32 வயதினனான எனக்கு அன்று தோன்றவில்லை.

தொடர்ந்த நிகழ்வுகள், மாநாட்டை நடத்தும் நடு ஓட்டத்துள் என்னை அடித்துச் சென்றன. பொறுப்புகளைச் சுமக்கத் தோள்களைக் கொடுத்தேன். அரசின் எதிர்ப்பு, அரசு சார்ந்த ஒரு சில தமிழரின் எதிர்ப்பு யாவற்றையும் மீறி யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்தினோம்.

ஒவ்வொரு நகர்விலும் அன்பும் அறிவும் எமக்குப் படைக்கலன். எதிர்த்தவர்கள் மீது அன்பு காட்டினோம். எனவே நாம் எதிரிகளாகவில்லை. ஆனாலும் கருத்துவேறுபட்டிருந்தோம். கருத்துவேறுபட்டிருந்ததை இரு சாராரும் ஒப்புக்கொண்டோம். எதிரெதிரான கருத்திருந்தாலும் ஒருவருக்கொருவர் அன்பு காட்டினோம். புலமைக் களத்தில் அஃதே எம்மைச் சாதனையாளராக்கியது. தடைகளைக் கடந்து, எதிர்ப்புகளை மீறி 02.01.1974 தொடக்கம் 09.01.1974 வரை மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது.

புலமைக் களம் போற்றும் நிகழ்வு மட்டுமன்று, உணர்வுக் களமும் சார்ந்த நிகழ்வாயிற்று. தமிழர் ஒவ்வொருவரின் உணர்வையும் நாம் வெளிக்கொணர்ந்தோம். மாநாட்டு வெற்றியால் பூரிக்காத ஈழத்தமிழர் எவரும் இருக்கவில்லை. மாநாட்டை எவ்வாறாயினும் யாழ்ப்பாணத்தில் நடத்துவோம் என்ற இறுக்கமான எம் நிலையே ஈழத்தமிழர் ஒவ்வொருவரின் ஆழ்மன நிலையாக இருந்ததைக் காலப்போக்கில் உணர்ந்தோம்.

02.01.1974 தொடக்கம் 09.01.1974 வரை புலமைக் களத்திலும் உணர்வுக் களத்திலும் நாம் நிகழ்த்திய சாதனையை, வேதனையாக மாற்ற, 10.01.1974ஆம் நாள் நிகழ்வுகள், புலமையற்ற சிறுமதியாளருக்கு வாய்ப்பாயிற்று. எனது யாழ்ப்பாணமே என்ற தலைப்பில் 1981இல் நான் எழுதிய 280 பக்க நூல், சாதனைப் பட்டியல். இந்த 80 பக்க நூல், நான் எழுதும் வேதனைப் பட்டியல்.

மறவன்புலவு,
சாவகச்சேரி,
திபி மார்கழி 2046 (10.01.2016)

மறவன்புலவு க. சச்சிதானந்தன்



02.01.1974 யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபம்,
நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு,
தொடக்க உரை, வண. தனிநாயக அடிகள்

# ஒன்பது படுகொலைகள்

சின்னத்தம்பி நந்தகுமார் (14 வயது)



21.02.1960 -- 10.01.1974

தந்தை சுப்பிரமணியம் சின்னத்தம்பி, சிங்கப்பூரில் பணி புரிந்து ஓய்வுபெற்ற தலைமை எழுத்தர்.

தாய் சிவக்கொழுந்து.

உடன்பிறந்தோர் அனந்தன், அனந்தகுமாரி, சந்திரகுமாரி, சூரியகுமாரி, அனந்தபாலன்,. சிவபாதம்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கபொத (சா) வகுப்பில் பயின்றவர்.

மாணவர்.

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

10.01.1974 மாலை 0800 மணியளவில் யாழ்ப்பாணம், வீரசிங்க மண்டப முன்றிலில் இலங்கை அரசுக் காவல் துறையின் கண்ணீர்ப் புகை வீச்சாலும் தாக்குதலாலும் உயிரிழந்தார்.

வேலுப்பிள்ளை கேசவராசன் (15 வயது)



04.08.1959 -- 10.01.1974

தந்தை இராமலிங்கம் வேலுப்பிள்ளை, மருந்தாளர்.

தாய் மனோன்மணி.

உடன்பிறந்தோர் ஆனந்தராசன், சண்முகராசன், மாலினி.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கபொத (சா) வகுப்பில் பயின்றவர். விக்ரோறியா அறிவியல் கழகத்தின் முதலிடச் சான்றிதழ் பெற்றவர்.

மாணவர்.

அனிஞ்சிலடி, தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

10.01.1974 மாலை 0800 மணியளவில் யாழ்ப்பாணம், வீரசிங்க மண்டப முன்றிலில் இலங்கை அரசுக் காவல் துறையின் கண்ணீர்ப் புகை வீச்சாலும் தாக்குதலாலும் உயிரிழந்தார்.

இராசதுரை சிவானந்தம் (21 வயது)



13.11.1952 -- 10.01.1974

தந்தை சின்னப்பு இராசதுரை.

தாய் இராசம்மா.

உடன்பிறந்தோர் தில்லைநாதன், சிவகுருநாதன், சண்முகநாதன், சுபத்திராதேவி.

கொக்குவில் இந்துக் கல்லூரி, கொழும்பு அலெக்சாந்திராக் கல்லூரி, கபொத (சா) வரை பயின்றவர்.

சுருட்டுத் தொழிலக மேற்பார்வையாளர்.

672, காங்கேயன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

10.01.1974 மாலை 0800 மணியளவில் யாழ்ப்பாணம், வீரசிங்க மண்டப முன்றிலில் இலங்கை அரசுக் காவல் துறையின் கண்ணீர்ப் புகை வீச்சாலும் தாக்குதலாலும் உயிரிழந்தார்.

பரம்சோதி சரவணபவான் (26 வயது)



19.09.1948 -- 10.01.1974

தந்தை இளையதம்பி பரம்சோதி.

தாய் கண்மணி.

உடன்பிறந்தோர் முத்துக்குமாரசுவாமி,
பாக்கியலட்சுமி.

பருத்தித்துறை தூய இருதயக் கல்லூரியில்
கபொத (சா) வரை பயின்றவர்.

தந்தையின் அடியொற்றி வணிகம்.

புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

10.01.1974 மாலை 0800 மணியளவில்
யாழ்ப்பாணம், வீரசிங்க மண்டப முன்றிலில்
இலங்கை அரசுக் காவல் துறையின் கண்ணீர்ப் புகை
வீச்சாலும் தாக்குதலாலும் உயிரிழந்தார்.

## இராசன் தேவரத்தினம் (27 வயது)



07.05.1947 -- 11.01.1974

தந்தை பொன்னம்பலம் நவரத்தினம் (யாழ்ப்பாணம் சிங்கப்பூர் பார்மசி, நாவலர் வீதி என்னார் தொழிலகம் உரிமையாளர்).

தாய் ஞானதேவி.

உடன்பிறந்தோர் இரஞ்சன் ஞானரத்தினம், மாலினி கந்தசாமி.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கபொத (சா) வரை பயின்றவர், இலண்டன் அனைத்துலகப் புத்தகப் பதிவுக் கழகத் தேர்வு, இலண்டன் பின்மன் தேர்வு என வெற்றிபெற்றவர்.

கணக்கு ஆய்வாளர்,

வியெம் பேரம்பலம் நிறுவனம், யாழ்ப்பாணம்.

230 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

10.01.1974 மாலை 0800 மணியளவில் யாழ்ப்பாணம், வீரசிங்க மண்டப முன்றிலில் இலங்கை அரசுக் காவல் துறையின் கண்ணீர்ப் புகை வீச்சையும் தாக்குதலையும் கண்டு தப்பி ஓடுகையில் யாழ்ப்பாண மின்சார நிலைய வீதியில் பேருந்து மோதியதால் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் அறுவை மருத்துவமும் கைகூடமல் 11.01.1974 அன்று உயிரிழந்தார்.

## வைத்தியநாதன் யோகநாதன் (33 வயது)



03.01.1941 -- 10.01.1974

தந்தை வைத்தியநாதன்.
தாய் சின்னக்குட்டி.
உடன்பிறந்தோர் கணேசமூர்த்தி (ஏழாலை மகாவித்தியாலய ஆசிரியர்), வித்தியானந்தன் (இயக்குநர், கொழும்பு கிளாசு வேர்க்சு), செல்வநாதன் (பங்காளர், நாதன் என்ரபிறைசசு, தெல்லிப்பளை), சாந்தினிதேவி.
மாமன் கொடிகாமம் கனகசபை.
மச்சினர் குழந்தைவடிவேலு, சோமசுந்தரம், சண்முகவடிவேலு.
மனைவி சாரதாதேவி.
மகள் பத்மசிறீ.
யாழ்ப்பாணம் வைத்தீசுவரக் கல்லூரி, சுன்னாகம் கந்தவரோதயக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் பயின்றவர். கபொத (சா) தேர்வில் வெற்றிபெற்றவர்.
தலைமண்கலட்டி, தெல்லிப்பளை.
10.01.1974 மாலை 0800 மணியளவில் யாழ்ப்பாணம், வீரசிங்க மண்டப முன்றிலில் இலங்கை அரசுக் காவல் துறையின் கண்ணீர்ப் புகை வீச்சாலும் தாக்குதலாலும் உயிரிழந்தார்.

## யோன் பிடலிசர் சிக்மறிங்கம் (53 வயது) 11



23.04.1921 -- 10.01.1974

தந்தை சாமுவேல் யோன் – யோன பிடலிசர், அச்சகத் தொழிலாளி.

தாய் யோன் அருளம்மா.

உடன்பிறந்தோர் மேரி யோசபின் யோன், யோன் அலெக்சாந்தர்.

மனைவி திரேசா கனகம்மா.

மக்கள் யோகிற்றா யோகரதி, அசும்ரா ஆனந்தரதி, ரேமண்டு பாலேந்திரா, இலெசிலி ரெசினால்டு, இசபெல்லா இன்பரசி, செவேந்திரா.

புனித பத்திரிசியார் கல்லூரி, பரியோவான் கல்லூரியில் பயின்றவர். இலண்டன் பல்கலைக் கழக இளங்கலைப் பட்டதாரி. இலங்கை அரசுச் சமாதான நீதவான், யாழ்ப்பாணம் 3ஆம் வட்டார மக்கள் குழுத் தலைவர், யாழ்ப்பாண மாவட்டத் துறைமுகச் சேவைச் சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர், பரி யோவான் கல்லூரி ஆசிரியர் சங்க துணைத் தலைவர், வடமாகாண ஆசிரியர் சங்க மேனாள் துணைத் தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர், பட்டதாரி ஆசிரியர் (கணிதம்), பரி யோவான் கல்லூரி.

28 பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.

10.01.1974 மாலை 0800 மணியளவில் யாழ்ப்பாணம், வீரசிங்க மண்டப முன்றிலில் இலங்கை அரசுக் காவல் துறையின் கண்ணீர்ப் புகை வீச்சிலிருந்தும் தாக்குதலிலிருந்தும் தப்புவதற்காகத் தன் மனைவி, மக்களுடன் ஓடுகையில் யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்கா முன்னதாக நெஞ்சடைப்பால் உயிரிழந்தார்.

## சிதம்பரி ஆறுமுகம் (55 வயது)

20.02.1919 -- 10.01.1974

தந்தை சிதம்பரப்பிள்ளை.

தாய் சின்னக்குட்டி.

உடன்பிறந்தோர் சபாபதி, தம்பையா, தங்கம், தெய்வநாயகி.

மனைவி பூரணம்.

மகன் தனபாலசிங்கம்.

நாயன்மார்கட்டுச் சாதனா பாடசாலையில் பயின்றவர்.

வேளாண்மை.

புண்ணியனார் மடம், நாயன்மார்கட்டு.

10.01.1974 மாலை 0800 மணியளவில் யாழ்ப்பாணம், வீரசிங்க மண்டப முன்றிலில் இலங்கை அரசுக் காவல் துறையின் கண்ணீர்ப் புகை வீச்சாலும் தாக்குதலாலும் உயிரிழந்தார்.

## சின்னத்துரை பொன்னுத்துரை (56 வயது)





05.11.1918 -- 10.01.1974

தந்தை பொன்னம்பலம் சின்னத்துரை
(ஆயுள்வேத மருத்துவர்).

தாய் சின்னம்மா.

உடன்பிறந்தோர் நவரத்தினம்.

மனைவி இராசம்மா ஆசிரியை.

மக்கள் செயசிங்கம், செயராசசிங்கம், செயர்தி,
செயராணி.

கோப்பாய் நாவலர் பாடசாலையில் பயின்றவர்.

தந்தை வழி ஆயுள்வேத மருத்துவர்.

வெள்ளெருவைப் பிள்ளையார்கோயிலடி,
கோப்பாய் வடக்கு.

10.01.1974 மாலை 0800 மணியளவில்
யாழ்ப்பாணம், வீரசிங்க மண்டப முன்றிலில்
இலங்கை அரசுக் காவல் துறையின் கண்ணீர்ப் புகை
வீச்சாலும் தாக்குதலாலும் உயிரிழந்தார்.

# பண்பாட்டு ஊர்தி நகர்வலத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தோர்

## ஆறுமுகம் தில்லைநாயகம் (37 வயது)



18.01.1936 -- 09.01.1974

தந்தை முருகர் ஆறுமுகம்.

தாய் செல்லம்மா.

உடன்பிறந்தோர் தங்கவேல், தெய்வேந்திரம், தருமசீலன், சச்சிதானந்தம், புட்பவதி, தனலட்சுமி.

மனைவி பராசம்மா.

மக்கள் சந்திரகுமார், செயக்குமார்.

சுன்னாகம் கந்தவரோதயக் கல்லூரியில் கபொத (சா) வரை பயின்றவர்.

சுன்னாகம் அஞ்சலகப் பதில் தலைவர்.

புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

09.01.1974 மாலை 0800 மணியளவில் யாழ்ப்பாணம், மருத்துவமனைக்கு முன்பாக, பண்பாட்டு ஊர்தி நகர்வலத்தைக் கண்டுகளிக்கையில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

## பிலேந்திரன் அருளப்பு (52 வயது)



02.06.1922 -- 09.01.1974

தந்தை பிலேந்திரன்.

தாய் செல்லக்கண்ணு.

உடன்பிறந்தோர் செல்வராசா, மதியாபரணம், ஞானம்மா, பொன்னுத்துரை.

மனைவி றெசீனா.


மக்கள் புசுப்பராணி, துரைராணி.

மூளாய்ப் பாடசாலையில் எட்டாம் வகுப்புவரை பயின்றவர்.

நாளாந்தக் கூலியாளர்.

14/1 இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

09.01.1974 மாலை 0800 மணியளவில் யாழ்ப்பாணம், மருத்துவமனைக்கு முன்பாக, பண்பாட்டு ஊர்தி நகர்வலத்தைக் கண்டுகளிக்கையில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.



02.01.1974 யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபம்,
நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு,
தலைமை உரை, பேரா. சு. வித்தியானந்தன்

# எனது யாழ்ப்பாணமே!

துப்பாக்கி வெடித்தது. சன்னங்கள் சிதறிப் பாய்ந்தன. தெருவோரத்தில் மின்சாரக் கம்பங்கள். கம்பங்களை இணைக்கும் மின் கம்பிகளில் குண்டுகள் தெறித்தன. கம்பிகள் அறுந்தன. கீழே விழுந்து தொங்கின.

கீழே குழாய்க் கம்பி வேலி. குழாய்க் கம்பிகளோ இரும்புக் கம்பிகள். அவற்றின் மீது அறுந்த மின் கம்பிகள் விழுந்தன. வேலியைத் தொட்டு நின்றது மக்கள் கூட்டம். அவர்களைத் திடீரென்று மின்சாரம் தாக்கியது. எதிர்பாரா விறுவிறுப்பு; பதை பதைப்பு; ஓராயிரம் வேல்கள் ஒரே நேரத்தில் உடலெங்கும் பாய்வது போன்ற உணர்வு. திடீரென மின்சாரம் பாய்ந்து பலரைத் தூக்கியெறிந்தது. எதிர்பாராத தாக்குதலால் அதிர்ந்து போயினர்.

*முருகா,* என்ற ஓலம். *சிவனே,* என் *உயிரைக் காப்பாயோ?* என்ற அலறல், ஓலம்; *பெருமாளே,* என்ற பெருங் கூவல்; *அல்லாவே,* என ஓலம்; *மேரித் தாயே, ஏசுவே,* என இறைஞ்சல்; நினைவிழந்து செயலிழந்து சாயுமுன் இறைவனை அழைத்தனர்; இன்னருள் வேண்டினர்.

*48 வயதுடைய பத்திநாதர், அரச மருத்துவமனையில் எழுதுவினைஞர். குழாய்க் கம்பி வேலிக்கருகில் கூட்டத்தோடு இருந்தவர். மின் கம்பிகளை நோக்கி ஒருவர் சுட்டார். ஐந்து அல்லது ஆறுமுறை சுட்டார். சுட்ட உடனேயே எரிசுருள் கம்பி ஒன்று என்மீது விழுந்தது. மின்சாரம் தாக்கியதை உணர்ந்தேன்.*



02.01.1974 யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபம்,
நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு,
கனடாத் தமிழறிஞர் பேரா. பிருந்தா பெக்கர்
(Prof. Brenda Beck) உரை

அதிர்ச்சியுற்றுத் துடிதுடித்தேன். ஏசுவையும் மேரியையும் இறைஞ்சினேன். ஏனைய பலர்மீது மின்கம்பிச் சுருள்கள் விழக் கண்டேன். தூக்கியெறிந்தது போல உணர்ந்தேன். சில மாத்திரி (மீற்றர்) தொலைவில் விழுந்தேன். நினைவிழந்து கொண்டிருந்தேன். காவல் துறைப் பணியாளர் ஒருவர் தன் சப்பாத்துக் காலினால் என்னை உதைத்தமை தெரிந்தது. தொடர்ந்து நான் முழுமையாக நினைவிழந்தேன். பத்திநாதர் இவ்வாறு பின்னர் கூறினார்.

## எழுவர் இறந்தனர்

வேலுப்பிள்ளை கேசவராசா துடிதுடித்து இறந்தார். வைத்தியநாதன் யோகநாதன் பதைபதைத்து உயிர் நீத்தார். சின்னத்தம்பி நந்தகுமார் அதிர்ச்சியால் துவண்டு மாண்டார். சிதம்பரஆறுமுகம் வதங்கி மடிந்தார். இராசதுரை சிவானந்தன் அலமந்து ஆவி நீத்தார். பரஞ்சோதி சரவணபவன் உடல் சோர்ந்து இறந்தார். ஏழு தமிழர்கள் உயிர் துறந்தனர்.

இந்த எழுவரும் இறந்து கொண்டிருக்கையில், பத்தி நாதரைப் போல் பலர் மயங்கிக் கொண்டிருக்கையில், கண்ணீர்ப் புகைக் குண்டுகளைக் காவல் துறையினர் தமிழர் கூட்டத்தை நோக்கிச் சுட்டனர்.

## நயினார் முகமது உரை

ஐம்பதினாயிரம் தமிழர் அங்கே கூடியிருந்தனர். ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர், முதியவர், இளையவர் அனைவரும் தமிழர்கள். ஒலிபெருக்கி வழியே அமிழ்தமாகத் தமிழ் மழை பொழியக் கேட்டனர். தமிழ்ச் சொற்களைத் தெரிந்தெடுத்துச் சுவையூட்டும் தொடர்களாக்கி, இனிமையான நடையில், எடுப்பான குரலில், அமுதமாகப் பொழிந்தார் திருச்சித் தமிழ்ப் பேராசிரியர் நயினார் முகமது. செவிவழி மாந்தினர் கூட்டத்தினர். அங்கே தெய்வத் தமிழ், பூசனைக்கு உரியதாயிற்று.



10.01.1974 யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபம், நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு. தமிழகத் தமிழறிஞர் பேரா. நயினார் முகமது உரை

# பூசை வேளையில் கரடி



பூசை வேளையில் கரடி புகுந்தது போல் காவல் துறையினர் புகுந்தனர். கண்ணீர்ப் புகைக் குண்டுகளைச் சிதறினர். மின்கம்பிகளின் மீது சுட்டனர். குண்டாந்தடிகளால் தாக்கினர். சேவலம், சப்பாத்துக் கால்களால் தமிழர்களை உதைத்தனர்; பந்தாடினர்.

கூட்டத்தில் அமளி; அல்லோல கல்லோலம். கண்ணீர்ப் புகை கண்களை எரித்தது; மூக்கினை அடைத்தது. கண்ணீர் விட்டனர். தண்ணீர் தேடினர். மூக்கில் நீர் சிந்தினர். நாக்கு வறண்டு அழுதனர். முகத்தைத் துணியால் மூடினர். தடுக்கி விழுந்தனர். உடைமைகளைப் பறிகொடுத்தனர், சிதறி ஓடினர்.

மிதி வண்டிகளை அடுக்கி வைத்திருந்தனர். ஓடிய வேகத்தில் 56 வயதுடைய முருகேசு சின்னையா மிதி வண்டிகளின் மேல் குப்புற விழுந்தார். எழப் பார்த்தார்; முடியவில்லை. தலையை நிமிர்த்தமுன், அவர்மேல் மிதித்தவாறு பலர் ஏறி ஓடினர். மிதி வண்டிகளுக்கிடையில் சின்னையா நசிந்தார். ஏறியவர், நசித்தவர், ஓடியவர் அனைவரும் மறையும் பொழுது சின்னையா நினைவிழக்கும் நிலையை எய்தினார். இறந்து விடுவேனோ? என அஞ்சினார். 56 வயதல்லவா!

சின்னையா எழுந்தார். கால்கள் இரண்டும் வலித்தன. நொண்டி நொண்டி ஓடினார். கண்ணீர்ப் புகை இல்லாத காற்றுவெளி வந்ததும் நின்றார். குனிந்து பார்த்தார். இரத்தம் பெருகி வேட்டி நனைந்திருந்தது. காலில் வெட்டுக் காயம். காகிதம் ஒன்றை எடுத்து வழிந்த இரத்தத்தைத் துடைத்தார். நிமிர்ந்து பார்த்தார். ஆடை எதுவுமின்றி அம்மணமாக ஒருவர் ஓடி வந்ததைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்து, தனது சட்டையைக் கழற்றி அவருக்குக் கொடுத்தார்.

மகேசுவரி இலட்சுமணன் தாலிக் கொடியை இழந்தார். கணவர் இலட்சுமணன் கைக்கடிகாரத்தைப் பறிகொடுத்தார். பெருமாள் விசயராசு பாதுகாப்புக்காகத் தன் சட்டைப் பைக்குள்



09.01.1974 யாழ்ப்பாணம், நல்லூர், அருள்மிகு சட்டநாதர் கோயிலில் வழிபாடு, நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுச் செயலாளர் திரு. வி. எசு. துரைராசா, காவல்துறை உதவி ஆணையாளர் திரு. சந்திரசேகரா

கைக்கடிகாரத்தை வைத்திருந்தார். அவரைக் குண்டாந் தடியால் அடித்த காவல்துறைப் பணியாளர், சட்டைப் பைக்குள் கையை விட்டுக் கைக்கடிகாரத்தையும் காசையும் களவாடினார்; முப்பது வயதான விசயராசுவை ஓட ஓட விரட்டினார்.

## பைந் தமிழரா? பறைத் தமிழரா?

காவல்துறை வீரர்கள், பெண்களின் ஆடைகளை உரிந்தனர். ஆண்களின் வேட்டிகளை அவிழ்த்தனர். உடைமைகளைக் களவாடினர். பெண்கள் உள்ளாடைகளுடன் தலைவிரி கோலமாக ஓடினர். தம்முடன் வந்த சிறுவர் சிறுமியரையும் தவிக்கவிட்டு நாலாபக்கமும் சிதறி ஓடினர். காவல்துறைப் பணியாளர்கள் தமிழர்களைச் சப்பாத்துக் காலால் உதைத்துப் பறைத் தமிழா என இழித்துரைத்தனர்.

செந்தமிழர், தீந்தமிழர், பைந்தமிழர் என்றெல்லாம் பேராசிரியர் நயினார் முகமது தமிழரின் பெருமை பேசினார். மதுவுண்ட வண்டு போல், மகுடி கேட்ட நாகம் போல், மயங்கிய பைந்தமிழரைக் காவல்துறைப் பணியாளர் பறைத் தமிழர் எனப் பழித்தனர்; இழித்தனர்; உதைத்தனர்; ஆடைகளை அவிழ்த்தனர்; உடைமைகளைப் பறித்தனர்; உயிர்களையும் பறித்தனர். ஊழியே வந்ததோ எனத் தமிழர் அலமந்தனர்.

யாழ்ப்பாணம் காணாத கூட்டம்! யாழ்ப்பாணம் காணாத ஓட்டம்! 50,000க்கும் மேற்பட்ட தமிழர் கூடினர்; காவல் துறைப் பணியாளர் முப்பதின்மர் தாக்குதலால் சிதறி ஓடினர்.

இவ்வளவு பெரிய கூட்டமோ, கூட்டம் சிதறிய ஓட்டமோ, யாழ்ப்பாணத்தில் இதற்கு முன்பு நடைபெறவில்லை என முதியவர்களும் வரலாறு படித்தவர்களும் கூறினார்கள். வரலாறு படைத்த நிகழ்ச்சி அன்று 2004 மார்கழி 28 (10.01.1974) யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

## சங்கிலியனின் காலம்

354 ஆண்டுகட்கு முன்னர், திபி 1650 (கிபி1619)



ஆனியில் யாழ்ப்பாணத்தில் தமிழர் கூடினர், போரிட்டனர், சிதறி ஓடினர். சில ஆயிரம் யாழ்ப்பாணத் தமிழ் வீரர்களும் தஞ்சை நாயக்க அரசின் 5000 படை வீரர்களும் தமிழ் மன்னன் சங்கிலியன் தலைமையில் ஓரணியில். 150 போர்த்துக்கேய வீரர்களும் 2000 சிங்களக் கூலிப் படை வீரர்களும் பிலிப்பு இடி ஒலிவரா என்ற போர்த்துக்கேயத் தளபதியின் தலைமையில் எதிரணியில். வண்ணார்பண்ணையில் பெரும் போர் நிகழ்ந்தது. போர்த்துக்கேயத் தளபதி தலைமையில் வந்த படைகள் பின் வாங்கின. தமிழ்ப் படைகள் முன்னேறி, வெற்றி வாகை சூடும் நேரத்தில்...,

காக்கை வன்னியன் என்ற தமிழன் சூழ்ச்சி செய்தான். நண்பனைப் போல் சங்கிலியனிடம் வந்தான். சங்கிலியனைச் சிறை பிடித்துப் போர்த்துக்கேயரிடம் ஒப்படைத்தான். தலைமை இழந்த தமிழர் படை நிலை குலைந்தது; வெற்றியை முழுமையாக்க முடியாது சிதறி ஓடியது.

## அப்பாவிகள் மீது அட்டூழியம்

திபி 1650 (கிபி 1619) ஆனியில், வண்ணார்பண்ணையில், சிதறி ஓடிய தமிழர்கள் போர்வீரர்கள், போரிட வந்தவர்கள். 2004 மார்கழியில் (1974 தை) யாழ்ப்பாணம் முற்றவெளியில் சிதறியோடிய தமிழர்கள் போரிட வரவில்லை. சிறுவர் சிறுமியர், இளையவர், முதியவர், பெண்டிர் என ஒன்று திரண்ட, ஒன்று மறியாத அப்பாவித் தமிழர்கள்.

தமிழ் மொழியைச் சீராட்ட வந்தவர்கள். தமிழறிஞர் களைப் பாராட்ட வந்தவர்கள். சிங்களத் தளபதி ஒருவரின் ஆணையின் கீழ் வந்த காவல்துறைப் பணியாளர்கள், ஒன்றுமறியாத் தமிழர் மீது காடைத்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகளின் இறுதியில் இந்த அட்டூழியம் நடந்தது.

யாழ்ப்பாணத்தில் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடத்தப்படுவதை இலங்கை அரசு விரும்பவில்லை. சிங்களப் பெரும்பான்மைப் பாராளுமன்றமே யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தது. சிங்களவர் ஒருவர் காவல் துறைத் தலைவராக யாழ்ப்பாணத்தில் பதவியில் இருந்தார். அமைதியாக நடைபெற்ற கூட்டம், தமிழர் கூட்டம் என்ற ஒரே காரணத்தால் காவல்துறையினர் கலைத்தனர். தமிழ் மண்ணாம் யாழ்ப்பாணத்தில் பைந்தமிழரைப் பறைத்தமிழரெனப் பழித்தனர்.

## ஈழநாடு

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன் 10.01. 1974 வியாழக்கிழமை நிகழ்ச்சி நடைபெற்ற பின் யாழ்ப்பாண நகரம் இருந்த நிலையை *ஈழநாடு* நாளிதழ் நிருபர்கள் பின்வருமாறு விவரித்தனர்:




*யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டப முன் பக்கக் கண்ணாடிகள் யாவும் நொறுக்கப்பட்டுள்ளன. முன்னால் உள்ள இரும்புக் கம்பிகள் வளைக்கப்பட்டிருந்ததோடு, கதிரைகளும் சேதப்படுத்தப்பட்டிருந்தன.*

*நேற்று அதிகாலை 3 மணிக்கு நமது நிருபர்கள், அசம்பாவிதம் நடந்த இடங்களை நேரில் பார்வையிடச் சென்றபோது மேற்குறிப்பிட்ட காட்சியைக் கண்டார்கள்.*

*பேருந்து நிலையத்தில் காவலர்களும் இராணுவத்தினரும் காணப்பட்டனர். அரசாங்க அதிபரின் உத்தரவிற்கிணங்க நள்ளிரவு 2 மணிக்குச் சகல இடங்களுக்கும் விசேடப் பேருந்துச்*




சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தபோதிலும், மக்கள் பேருந்துகளில் பிரயாணம் செய்ய அஞ்சியதைத் தொடர்ந்து அச்சேவைகள் கைவிடப்பட்டன.

யாழ் முற்றவெளியில் ஆயுதந் தரித்த காவலர்கள் அதிகாலை வரை காணப்பட்டனர். சரக்குந்து ஒன்றிலும் மலையுந்து(ஜீப்)களிலும் பொலிசார் இரவு முழுவதும் ரோந்து சுற்றினர்.

இராணி திரையரங்கில் தீவுப்பகுதி, பருத்தித்துறைப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 200 பேர் இரவு முழுவதும்

தங்கியிருந்தனர். அதிகாலை 2 மணிக்கு விசேடப் பேருந்துச் சேவை ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்ட போதிலும், ஒருவராவது வெளியில் வரவில்லை. இவர்களில் 10 பெண்களும் காணப்பட்டனர். விசேடப் பேருந்துச் சேவை நடைபெறுவதாக, ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்ட போதிலும் ஒருவராவது பேருந்து நிலையம் வந்து சேரவில்லை. யாழ்ப்பாணம் தபாற் கந்தோர் வளவிற்குள்ளும் பலர் தஞ்சமடைந்திருந்தனர். வெலிங்ரன், வின்சர் திரையரங்குகளிலும் சுமார் 150 பேர் வரை தஞ்சமடைந்திருந்தனர்.


இறீகல் திரையரங்கிலும் சுமார் 100 பேர் வரை தஞ்சமடைந்திருந்தனர். முதலாவது படக் காட்சிக்கு வந்தவர்கள் கூடத் திரும்பிச் செல்லவில்லை.

வீரசிங்கம் மண்டபத்தின் இருபக்கத்திலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மிதி வண்டிகள் காணப்பட்டன. இவைகளில் அநேக மிதி வண்டிகள் நொறுக்கப்பட்டிருந்தன. முற்றவெளிப் பகுதியிலும் முனீசுவரன் வீதியிலும் சில மிதி வண்டிகள் சேதமடைந்த நிலையில் காணப்பட்டன.

வீரசிங்கம் மண்டபத்திற்குள்ளும், வெளியிலும், முற்றவெளியிலும், ஆயிரக் கணக்கான செருப்புகளும் சப்பாத்துகளும் காணப்பட்டன. லேஞ்சிகள், கைப்பைகள், துவாய்களும் இங்குமங்குமாகக் காணப்பட்டன.

பேருந்து நிலையத்தில், விசேடச் சேவைக்காக 12 பேருந்துகளும் நடத்துநர்களும் தயாராக இருந்தனர். ஆனால் சேவை நடைபெறவில்லை. அதிகாலை 5 மணி வரை சேவை ஆரம்பிக்கவில்லை. கடந்த 8 தினங்களாக அலங்காரத்துடன் காணப்பட்ட வீதிகள், பொலிவிழந்து வெறிச்சோடிக் கிடந்தன. வீதியில் ஒருவரைக் கூடக் காணமுடியவில்லை. வீடுகளிலெல்லாம் விளக்குகள்கூட அணைக்கப்பட்டிருந்தன. எங்கும் மயான அமைதி நிலவியது.

வீரசிங்கம் மண்டபத்தில் இருந்தவர்கள் ஒரு வழியாக வீடுபோய்ச் சேர்ந்துவிட்டனர். சுமார் 10 பேர் மட்டுமே அங்கு



முனைவர் இரா. ஜனார்த்தனம் எனக்கு நல்ல நண்பர். 1965 மாசியின் மாணவர் இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்திலிருந்து அவரை அறிவேன்.

அறிஞர் அண்ணாவின் நாடகங்கள் தலைப்பில் பேரா. மு. வரதராசனார் வழிகாட்டலில் முனைவர் பட்டம் பெற்றவர்.

1968 இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு சென்னையில் நடந்தபொழுது நானும் அவரும் மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகள் படித்தோம்.

கலாநிதி உவைஸ், நான், முனைவர் ஜனார்த்தனம் 1968 மாநாட்டில் கலந்துகொண்ட காலப் படம் மேலே.

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அவர் தமிழறிஞராகத்தான் வந்தார். யாழ்ப்பாணத்துக்கு வந்தபின் மாநாட்டில் பதிவு செய்யலாம் என்ற கண்ணோட்டத்தில் மாநாட்டுக்கு வந்தார்.

காணப்பட்டனர்.

மருத்துவமனை வீதியிலும் சன நடமாட்டம் எதுவுமில்லை. எங்கு பார்த்தாலும் பொலிஸ் மயமாகவே காணப்பட்டது. முனீசுவரன் வீதியிலும் ஏராளமான செருப்புகள் காணப்பட்டன.

பேருந்து நிலையத்தில் கண்ணீர்ப் புகைக் குண்டு ஒன்று வெடிக்காத நிலையில் காணப்பட்டது. வீரசிங்கம் மண்டபத்தில் கட்டப்பட்டிருந்த சிகரமும் சேதமடைந்திருந்தது. சில இதளியக் குமிழ்களும் மெர்க்குறி பல்புகளும் உடைக்கப்பட்டிருந்தன. அதிகாலை 5 மணிவரை எங்கும் மயான அமைதியாகவே இருந்தது.


## வீரகேசரி

வீரகேசரி நாளிதழின் யாழ் நிருபர் திரு. சு. செல்லத்துரை பின்வருமாறு எழுதினார்.

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியான பொதுக் கூட்டம் ஆரம்பமானது.

மண்டபத்துக்குள் சனத்திரளை அடக்க முடியாததாலும், மண்டபத்துக்கு வெளியிலே கூட்டத்தை நடாத்துமாறு பொதுமக்கள் வலியுறுத்தியதைத் தொடர்ந்தும் மாநாட்டு ஏற்பாட்டாளர் மண்டபத்துக்கு வெளியே உள்ள முற்றத்தில் அவசர அவசரமாக மேடை அமைத்துக் கூட்டத்தை நடத்திக்கொண்டிருந்தனர்.

சுமார் அரை இலட்சம் மக்கள் மண்டபத்தின் முன்னுள்ள வீதி, வெளி, என எங்கும் பரந்து நின்று, வெளிநாட்டறிஞர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.



1966இல் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்குத் தமிழ்நாட்டிலிருந்து சென்றோரின் படம்.

முதலமைச்சர் மு. பக்தவச்சலம் தலைமையில், எதிர்க்கட்சித் தலைவர் இரா. நெடுஞ்செழியன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் கோலாலம்பூர் சென்றனர்.

தமிழக அறிஞர் குழாமை அழைத்துச் சென்றது தமிழக அரசு.

அரசியலார் இல்லாமல் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெறுவது குறைவு.

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக் குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மு. சிவசிதம்பரம் இருந்தார்.

இலங்கை சுதந்திரக் கட்சியின் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா இருந்தார். முன்பு மலையகத்தில் தேர்தலில் போட்டியிட்ட கலாநிதி ஜேம்ஸ் இரத்தினம் இருந்தார்.

அரசியலார் மாநாடுகளில் பங்குபெறுவதாலேயே அவை அரசியல் மாநாடுகளாகிவிடா.

முனைவர் இரா. ஜனார்த்தனம் அரசியலில் இருந்தார். அதற்காக அவரை அறிஞரல்ல எனப் புறந்தள்ள முடியாதே.

இரவு 8.30 மணியிருக்கும். அப்பொழுது, மோட்டார் சைக்கிள் ஒன்றில் இரு காவலர்கள், கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வீதி வழியாக வந்தனர். வீதியெங்கும் சனத்திரள் திரண்டிருந்ததால், அவர்களுக்கு வழிவிட்டுக் கொடுக்க மக்கள் மறுத்துவிட்டனர். இதனால் இரு காவலர்களும் வந்த வழியே திரும்பிச் சென்றனர்.


பின்னர் சிறிது நேரம் கழித்து, சுமையுந்து (ரக்) ஒன்றிலும், மலையுந்து (ஜீப்) ஒன்றிலுமாக, ஆயுதம் தாங்கிய காவலர் அவ்வழியாக வந்தனர். இவர்களும் தமக்கு வழிவிட்டுத் தருமாறு வீதிக்குக் குறுக்கே நின்றோரைக் கேட்டனர். மக்கள் செவிசாய்க்கவில்லை.

வாகனங்களிலிருந்து காவலர்கள் இறங்கி மக்களை வீதிகளிலிருந்து அப்புறப்படுத்தத் தலைப்பட்டனர். இச்சமயம் அங்கு சலசலப்பு ஏற்பட்டது. கற்கள், குண்டாந்தடி முதலியன அங்கு பரிமாறப்பட்டன.

காவலர்களின் தடியடிப் பிரயோகத்தைத் தொடர்ந்து மக்கள் அங்குமிங்கும் சிதறுண்டு ஓடினர். காவலர்களும் விடாமல் ஓடியோரைத் துரத்தித் துரத்தி அடித்தனர். இதனால் 30உக்கு மேற்பட்டோர் படுகாயத்துக்குள்ளாகினர். சனத்திரளைக் கலைக்கக் காவலர் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் செய்தனர்.

இதனாலும் மக்கள் செய்வதொன்றறியாது அங்குமிங்கும், கூட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சமீபமாகவுள்ள குளம், சேறுசகதிமிக்க வாய்க்கால்கள், அகழிகள், கிணறுகள் என்று எதையும் கவனிக்கத் திராணியற்றவர்களாக விழுந்து எழுந்து சிதறி ஓடிக் கொண்டனர். இப்படியாகப் பெரிய அமளிதுமளி அங்கு ஏற்பட்டது. இந்தச் சனச்சஞ்சடி காரணமாக ஏழு பேர் சனத்துக்குள் சிக்கிப் பலியானார்கள். சிக்மரிங்கம் என்ற மற்றொரு யாழ் பிரமுகர், நெஞ்சு வலிக்கு இலக்காகி மரணமானார்.

மற்றொரு நபரின் சடலம் நேற்று அகழிக்குள் இருந்து எடுக்கப்பட்டிருக்கிறது.



1968இல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இலங்கை அரசின் சார்பில் அமைச்சர் மு. திருச்செல்வம் கலந்துகொண்டார். இந்திய அரசின் குடியரசுத் தலைவர் சாகிர் உசேன், தமிழக ஆளுநர் உஜ்ஜல் சிங், முதலமைச்சர் சி. என். அண்ணாதுரை என மேடையில் அரசியலார் பலர் இருக்க மாநாட்டுத் தொடக்க விழாவில் சென்னைக் கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டத்தில் மு. திருச்செல்வம் உரையாற்றுகிறார்.

எல்லாமாக மொத்தம் ஒன்பது பேர் மரணமானதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. 30 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

காயமடைந்தவர்களில் அகில உலக இளைஞர் பேரவைத் தலைவரான இரா. சனார்த்தனமும் ஒருவர். இவருக்குக் கையிலும் காலிலும் காயமேற்பட்டிருக்கிறது. இவர் காயத்துக்குச் சிகிச்சை பெற்றதைத் தொடர்ந்து கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டார். கொழும்பிலிருந்து நேற்று மாலை இந்தியா செல்லவிருந்தார். வேறு எந்தவொரு வெளிநாட்டறிஞருக்கும் இந்த அசம்பாவிதத்தில் காயமேற்படவில்லை.

மாநாட்டின் அமைப்புக் குழு உறுப்பினரான டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா மட்டும் கண்ணீர்ப் புகைக்கு ஆளானார். ஆயினும், தெய்வாதீனமாக ஆபத்து எதுவுமின்றித் தப்பிக்கொண்டார்.

தடியடியையும் கண்ணீர்ப் புகையையும் தொடர்ந்து நகரெங்கும் சிதறி ஓடிய மக்கள், திரையரங்குகளிலும், மருத்துவமனைக் கட்டடங்களிலும், வீடுகளிலும் தஞ்சமடைந்து கொண்டனர். இதனால் திரையரங்குகளில் படக் காட்சிகள் நிறுத்தப்பட்டன.

யாழ் நகர் பேருந்து நிலையத்தில் குழுமி நின்ற 2000க்கும் மேற்பட்ட மக்கள் மீதும் காவலர்கள் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் தடியடிப் பிரயோகமும் செய்தனர். இங்கு, மக்கள் இரண்டு பேருந்துகளைத் தீக்கிரையாக்கினர்.

கூட்டம் நடைபெற்ற இடத்தில் ஆங்காங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த நூற்றுக்கு மேற்பட்ட கார்கள் சேதத்துக்குள்ளாகின. 800உக்கு மேற்பட்ட மிதி வண்டிகள் கோட்டை மைதானத்தில் தேடுவாரற்றுச் சிதறுண்டு கிடந்தன. வீரசிங்கம் மண்டபமும் பலத்த சேதத்துக்குள்ளானது.

சம்பவத்தைக் கேள்வியுற்று அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா, உடனடியாக யாழ் காவல் நிலையத்துக்கு



1968இல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் அறிஞர்கள் பலருடன் பங்குபற்றிக் கட்டுரை வாசித்துக் கருத்துகள் பகிர்ந்தேன்.

இரவோடு இரவாக வந்து நிலைமைகளை அவதானித்து நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருந்தார்.




## விழவு இழவு

பதினோராம் திகதி வெள்ளிக்கிழமை காலை மருத்துவ மனையில், காயமடைந்தவர்களையும் இறந்தவர்களையும் நான் பார்த்தேன். என் தொண்டர் படையில் எவராவது அடிபட்டார்களா எனத் தேடினேன். வீரசிங்கம் மண்டப வாயிலில் மரண விசாரணை தொடங்கியது. பேராசிரியர் வித்தியானந்தன் சாட்சியமளித்தார்.

புதன்கிழமை விழவு; வெள்ளிக்கிழமை இழவு. புதன் கிழமை மகிழ்ச்சிக் கோலம்; வெள்ளிக்கிழமை மரண ஓலம்; மயான அமைதி; யாழ்ப்பாணக் குடாநாடு அழுதது. கடைகள் பூட்டப்பட்டன. பேருந்துகள் நிறுத்தப்பட்டன. தெருவெல்லாம் வெறிச்சோடியிருந்தன. மாவிலை, தோரணங்களை மூடிக் கறுப்புக் கொடிகள் பறந்தன. ஊர்கள்தோறும் அழுகைக் குரல்.

சின்னத்தம்பி நந்தகுமார் (14 வயது), சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்; வேலுப்பிள்ளை கேசவராசன் (15 வயது), அனிஞ்சிலடி, தொல்புரம் மேற்கு, சுழிபுரம்; இராசதுரை சிவானந்தம் (21 வயது), 672 காங்கேயன்துறை வீதி, யாழ்ப்பாணம்; பரம்சோதி சரவணபவான் (26 வயது), புலோலி கிழக்கு, பருத்தித்துறை; இராசன் தேவரத்தினம் (27 வயது), 230 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்; வைத்தியநாதன் யோகநாதன் (33 வயது), தலைமண்கலட்டி, தெல்லிப்பளை; யோன் பிடலிசர் சிக்மறிங்கம் (53 வயது), 28 பாங்சால் வீதி, யாழ்ப்பாணம், சிதம்பரி ஆறுமுகம் (55 வயது), புண்ணியனார் மடம், நாயன்மார்கட்டு; சின்னத்துரை பொன்னுத்துரை (56 வயது), வெள்ளெருவைப் பிள்ளையார்கோயிலடி, கோப்பாய் வடக்கு.

இந்த ஒன்பது பேரின் மரணச் சடங்குகளிலும் மாநாட்டு அமைப்புக் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.



புலமையாளர், கல்வியாளர், அறிஞர், அறிவார்வலர், ஆய்வாளர் ஆகியோர் ஒருங்கே திரண்டு தத்தம் ஆய்வுக் கருத்துரைகளை, கருதுகோள்களை, முடிபுகளை எடுத்துக்கூறிக் கலந்துரையாடும் அரங்கே ஆராய்ச்சி மாநாடு.1968இல் சென்னை, இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் நானும் மொழியியல் அறிஞர்கள் அகத்தியலிங்கமும், ஆஷேரும்.

## தினபதி

மரண ஊர்வலங்கள் பற்றிய நிகழ்ச்சிகளைத் தினபதி நாளிதழ் நிருபர் பின்வருமாறு எழுதினார்.

**தினபதி**

வியாழக்கிழமைக் குழப்பத்தில் உயிரிழந்த 9 பேரின் பிரேதங்களும், அவரவர் சொந்த இடங்களில் சனிக்கிழமை அன்று அடக்கம் செய்யப்பட்டன.

இறந்தவர்கள் குடாநாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்தவர்களாகையால் அன்று யாழ்ப்பாண மாவட்டமே சோகமாகக் காட்சியளித்தது.

எல்லா இடங்களிலும் ஆயிரம் ஆயிரம் பொது மக்கள் பிரேத ஊர்வலங்களில் கலந்துகொண்டனர். குறிப்பாகப் பெருந்தொகையான வாலிபர்கள் பிரேத ஊர்வலங்களின் முன்னால் வெண்ணிற உடை அணிந்து அணிவகுத்துச் சென்றனர்.

பிரேத ஊர்வலங்களில் அந்தப் பகுதி எம். பி.க்களும், தமிழரசு, தமிழ் காங்கிரசுக் கட்சிப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

நாச்சிமார்கோவிலடியைச் சேர்ந்தவரின் பிரேத ஊர்வலத்தில் சமசமாசப் பிரமுகர் திரு.ஏ. விசுவநாதனும் கலந்துகொண்டு கோம்பயன்மணல் சுடுகாட்டிற்குச் சென்றார்.

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த வாலிபரின் பிரேத ஊர்வலமும், நாவலர் வீதியைச் சேர்ந்தவரின் பிரேத ஊர்வலமும் தட்டாதெருச் சந்தியில் ஒன்றாகச் சந்தித்தபோது எல்லோர் கண்களிலும் நீர் மல்கியது.

பின்னர் இரண்டு பிரேதங்களும் ஒரே ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.



புலமையாளர், கல்வியாளர், அறிஞர், அறிவார்வலர், ஆய்வாளர் ஆகியோர் ஒருங்கே திரள்கையில் சமூகத்தில் உற்சாகம் பிறக்கும். 1974இல் யாழ்ப்பாணம், நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வந்த வெளிநாட்டு அறிஞரை வரவேற்று விருந்தோம்பிப் பாராட்டும் நிகழ்ச்சிகள் குடாநாடெங்கணும் நிகழ்ந்தன. மாநாட்டு விருந்தோம்பல் முழுவதற்கும் நான் பொறுப்பாக இருந்தேன். துளியும் அரசியல் கலக்காமல் நடந்தன. யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, மில்க் வைற் தொழிலதிபர் சிவத்தமிழ்ச்செல்வர் கந்தையா கனகராசா தனதில்லத்திற்கு வெளிநாட்டறிஞர்களை அழைத்து வரவேற்று விருந்தோம்பிய படம்.

இறந்தவர்களில் அநேகர் இளைஞர் ஆகையால் நாட்டின் எல்லா இடங்களிலும் மயான அமைதி நிலவியது.

வெள்ளிக்கிழமை முழுவதும் பூட்டப்பட்டிருந்த கடைகளில் சில மணி நேரமே திறந்து வியாபாரம் நடந்தது. நண்பகல் 12 மணிக்கு முன்னரே மீண்டும் அவை பூட்டப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் பதற்ற நிலை இருந்தது. இளைஞர்களின் கோபக்கனல், மாநாட்டைக் குழப்பக் காரணமாக இருந்தவர்கள் மீது திரும்பியது. தினபதி நாளிதழில் வெளிவந்த செய்தி:

யாழ்ப்பாணத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து இப்போது யாழ் மாவட்டத்தில் பதற்ற நிலை காணப்படுகிறது.

இதைத் தொடர்ந்து நல்லூர் எம். பி. திரு. சி. அருளம்பலம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராசா, யாழ் நகர மேயர் திரு. அல்பிரட் துரையப்பா மற்றும் அரசாங்க ஆதரவுடைய பிரமுகர்களின் வீடுகளை ஆயுதந் தாங்கிய காவல்துறை வீரர்கள் காவல் புரிந்துவருகின்றனர்.

அது மட்டுமன்றி, காவலரும், இராணுவத்தினரும் கூட்டாகக் குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அடிக்கடி காவல் (ரோந்து) சுற்றி வருகிறார்கள்.

சனிக்கிழமை நள்ளிரவு இருவர் நல்லூர்ப் பாராளுமன்ற உறுப்பினர் எம். பி. திரு. அருளம்பலத்தின் வீட்டிற்கு எதிரே உள்ள வீதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் உலாவியதாகவும், அதைத் தொடர்ந்து அங்கு காவல் புரிந்த காவலர்கள் துப்பாக்கியைக் காட்டித் தயார் நிலைப்படுத்திய போது, குண்டு வீசப்பட்டதாகவும் காவல்துறை வட்டாரங்களில் இருந்து அறிய வந்துள்ளது.

நல்லூர் எம். பி. திரு. சி. அருளம்பலத்தின் வீட்டடியில் சனிக்கிழமை நள்ளிரவு கைக்குண்டு வீசப்பட்டது.

கைக்குண்டு வீசப்பட்டதனால் அங்கு காவல் செய்து



கரணவாய் திரு. சி. மு. ஞானானந்தன், வண்ணார்பண்ணை திரு. விசயேந்திரா, தெல்லிப்பளை திரு. சிவகுமாரன் மூவரும் தயாரித்த கொழும்பு இந்து வாலிபர் சங்க நினைவு இதழின் ஒரு பக்கம். பேணி வைத்திருந்து திபி 2034இல் (கிபி 2003) கிளிநொச்சியில் அனைத்துப் பக்கங்களையும் என்னிடம் தந்தவர் பேரி சுப்பிரமணியம்.

கொண்டிருந்த காவலர்களில் ஒருவர் காயமுற்றார். வீதியால் சென்ற மற்றொருவரும் காயமுற்றார். இவர்கள் இருவரும் இப்போது யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## தமிழர் மரபு வழித் தாயகமெங்கும்

யாழ்ப்பாணம் மட்டுமன்று; வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை ஆகிய இடங்களிலும் அழுகுரல் கேட்டது; கறுப்புக் கொடிகள் உயர்ந்தன; கதவுகள் பூட்டிக் கொண்டன; பேருந்துகள் எரிந்தன; தமிழ் மக்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்; துயரத்தில் ஆழ்ந்தனர்.

சென்னையில் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். மதுரை மாநகராட்சி முதல்வர் திரு. மதுரை முத்து தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இலங்கைத் துணைத் தூதரக அலுவலக முன்றிலில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இலங்கையில் நடந்த உலகத் தமிழர் மாநாட்டில் காவலர்கள் தடியடித் தாக்குதல் நடத்தி 9 பேர் கொல்லப்பட்டதைக் கண்டித்து மத்திய அரசும் தமிழக அரசும் உடன் நடவடிக்கை எடுத்து நியாயமான தீர்வு காண வேண்டும். இதைச் செய்யத் தவறினால் தமிழ் மக்கள் பொறுக்கமாட்டார்கள். ஒவ்வொரு தமிழனும் உணர்ச்சிப் பிழம்பாக மாறுவான். தமிழர்களைப் பாதுகாக்கத் தனிப்படை அமைக்க வேண்டியிருக்கும் எனத் திரு. மதுரை முத்து அறிக்கை வெளியிட்டார்.

தமிழ் மக்கள் மனிதாபிமானத்தோடு நடத்தப்பட வேண்டும் என இந்திய அரசு, இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும். இவ்விடயத்தில் மத்திய அரசு அதிக அக்கறை கொள்ள வேண்டும் என்று தமிழக மக்கள் சார்பில் மத்திய அரசை வலியுறுத்துகிறேன் எனத் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இறந்தவர்கட்கு அநுதாபம் தெரிவிப்பதில், நிகழ்வுபற்றி

முழுமையான விசாரணை வேண்டும் எனக் கோருவதில், குற்றவாளிகள் எவராயினும் தண்டிக்கப்பட வேண்டும் எனக் கூறுவதில் பலர் ஈடுபட்டனர்.

## நினைவு மலர்

கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தினர் புதுமையான முயற்சியில் ஈடுபட்டனர். மாநாடு தொடர்பாக இறந்த பதினொரு பேர்களுக்கும் நினைவு இதழ் ஒன்றை வெளியிட்டனர். திரு. சி. மு. ஞானானந்தன், திரு. விசயேந்திரா, திரு. சிவகுமாரன் மூவருமாகத் தயாரித்த இந்த நினைவு இதழ் இறந்தவர்களின் முழு விவரங்களைக் கொண்டிருந்தது.

## உண்ணா நோன்பு

09.02.1974 அன்று தமிழர் வாழ்விடமெங்கும் மீண்டும் துக்க தினமாகியது. பாடசாலைகள், அரசாங்க அலுவலகங்கள், வணிக நிலையங்கள், தெருக்கள் யாவும் வெறிச்சோடிக் கிடந்தன.

யாழ்ப்பாணம் முற்றவெளி முனியப்பர் ஆலயத்துக்கு முன்னால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உண்ணாவிரதம் இருந்தனர். பொதுக் கூட்டம் நடத்த அவர்கட்கு அநுமதி கிடைக்கவில்லை.


மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் கடையடைப்பு, துக்கம் கடைப்பிடித்தல் நிகழ்ந்தன; அஞ்சலிக் கூட்டங்களும் நடந்தன.

துகிலுரியப்பட்ட பெண்கள் மீது ஆணையாக நம்மை நாமே ஆளப் பிரதிக்கினை செய்வோம். தமிழர்களாகிய நாம், அந்நியர்களிடமிருந்து விலகிக் கொண்டால்தான் விமோசனம் உண்டு; தமிழுக்கும் தமிழனுக்கும் வளர்ச்சி உண்டு; விருத்தி உண்டு எனத் திரு. அ. அமிர்தலிங்கம் அன்று உண்ணா விரதத்தை முடித்துவைத்து உரையாற்றினார்.

ஒன்பது பேரின் உயிர்த்தியாகம் தமிழ் இன விடுதலைப் போருக்கு அடிகோலுவதாக அமைந்து விட்டது. இவ்வாறு பேராசிரியர் வித்தியானந்தன், கொழும்பில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

திபி 2005 (கிபி 1974) கார்த்திகையில் திரு. உமா மகேசுவரன் எனது இல்லம் வந்திருந்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளையில் பொறுப்பு வகித்துவந்த அவர், நிலவரைவாளர் திணைக்களத்தில் பணிபுரிந்து வந்தார்.

தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர்நீத்த பதினொருவரின் நினைவாக என்ன செய்யலாம் என அவரிடம் கேட்டேன். முற்ற



வெளியில், வீரசிங்க மண்டபத்துக்கு முன்பாக உள்ள இடத்தில் நினைவுச் சின்னம் ஒன்றை அமைக்கலாமா? எனக் கேட்டேன். செய்யலாம் எனக் கூறினார்.

சில நாள்களின் பின் திரு. வி. எசு. துரைராசாவுடன் பேசினேன். பதினொரு தூண்கள் நிமிர்ந்து நிற்கும் வட்டமான அடித்தளம் ஒன்றின் வரை படத்தைப் பென்சிலால் வரைந்து எனக்குக் காட்டினார்.

திரு. உமா மகேசுவரனிடம் இதைத் தெரிவித்தேன். அரசு அனுமதி பெறாமல் முற்றவெளியில் இதைக் கட்டமுடியாது என்றேன். அதைத் தாம் பார்த்துக்கொள்வதாகத் திரு. உமா மகேசுவரன் கூறினார். சிறிய அளவில் செய்ய ஏற்படும் செலவினங்களைத் திரட்டித் தருவதாகக் கூறினேன்.

திபி 2005 மார்கழியில் (09.01.1975) யாழ்ப்பாணத்தில் என்னைச் சந்திப்பதாகக் கூறினார்.

கொழும்பில் கனத்தை இடுகாட்டுக்கு அருகே கருங்கல்

 லில், நினைவு நடுகல் கல்வட்டு ஒன்றை எழுதுவித்தேன்.

கடலட்டைத் தொழிற்சாலை ஒன்றை வடிவமைக்க மன்னார் உதவி அரசாங்க அதிபர் திரு. தயாபரனுக்கு உதவ மன்னாருக்குச் சென்றேன். மாலையில் அவருக்குத் தெரிந்த தச்சர் ஒருவரிடம் சென்று பதினொரு மரத் தூண்களுக்கான வடிவத்தையும் செலவையும் கொடுத்தேன். மறுநாளே அந்தத் தூண்களைத் தச்சர் தந்தார்.




எனது மகிழுந்தில் அவற்றை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் விரைந்தேன். திரு. உமாமகேசுவரன், திரு. இந்திரலிங்கம், உள்ளிட்ட பலரை 09.01.1975 அன்று சந்தித்தேன். நினைவுச் சின்னம் அமைக்கும் நிகழ்ச்சியைத் திட்டமிட்டோம்.

மன்னாரிலிருந்து செதுக்கிய 11 மரத்தூண்கள், கொழும்பிலிருந்து 'தமிழர் நினைவு நடுகல்' என எழுதிய கல்; யாழ்ப்பாணத்திலிருந்து பைஞ்சுதை, கல், மண், தொண்டர்கள்.

10.01.1975 அதிகாலை 4 மணிக்கு இவற்றை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து யாழ்ப்பாணம் முற்றவெளியில், வீரசிங்க மண்டபத்துக்கு முன்னால், இறந்த பதினொருவருக்காக எனப் பதினொரு தூண்கள் கொண்ட நினைவு நடுகல் அமைத்தோம்; அனைத்து மத வழிபாடும் நடத்தினோம்.

திரு. உமா மகேசுவரன், திரு. பேபி சுப்பிரமணியம், திரு. சுந்தர் பிரான்சிசர், திரு. இந்திரலிங்கம், திரு. முத்துக்குமாரசாமி உள்ளிட்ட பலர், தொண்டர்களாகப் பணியில் ஈடுபட்டு இரண்டு மணி நேரத்தில் நினைவுச் சின்னம் ஒன்றைக் கட்டினோம்.

சில வாரங்களின் பின்னர் அரசின் ஏவலர் அந்நினைவுச் சின்னத்தை உடைத்தெறிந்தனர். அடுத்த ஆண்டு அதே நாளில்






நினைவுச் சின்னத்தை மீண்டும் எழுப்புவது, வலிமையானதாகக் கட்டியெழுப்புவது எனத் தீர்மானித்துக் கொண்டேன்.

திபி 2006 (கிபி 1975) கார்த்திகையில் திரு. வி. எசு. துரைராசாவுடன் பேசினேன். உடைக்க முடியாததும், சில மணி நேரங்களில் கட்டியெழுப்பக்கூடியதுமான வரைபடம் கேட்டேன்.

*உருக்குத் தண்டவாளங்களை நல்ல அத்திவாரத்தில் நிமிர்த்துங்கள். அகன்ற சீமெந்துக் குழாய்களைச் சுற்றி நிமிர்த்துங்கள்.*

*இடைவெளியைச் சீமெந்துக்கல் கலவையைப் போட்டு நிரப்புங்கள். பதினொருவருக்கும் ஒவ்வொரு அடியாக 11 அடி உயரத்தில், 3 அடி விட்டத்தில் அமையுங்கள்.* பென்சிலால் படம் போட்டுக் காட்டினார் திரு. துரைராசா. இந்த விபரத்தைத்



யாழ்ப்பாணத்தில் 1974இல் நடந்த நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டு அறிக்கையை, மதுரையில் 1981இல் நடந்த ஐந்தாவது தமிழாராய்ச்சி மாநாட்டுத் தொடக்க அரங்கில் வாசிக்குமாறு என்னைப் பணித்தவர் இலங்கைக் கிளைத் தலைவர் பேரா. சு. வித்தியானந்தன்.



திரு. உமா மகேசுவரனிடம் கூறினேன்.

புறக்கோட்டைத் தமிழ் வணிகரிடம் சென்றோம். 3 அடி விட்டத்தில் 15 அடி நீளத்துக்கான சீமெந்துக் குழாய்களை வாங்கினோம். சரக்குந்தின் உச்சியில் ஏற்றினோம். 10.01.1976 அதிகாலை 2 மணிக்கு அந்தச் சரக்குந்து யாழ்ப்பாணம் முற்றவெளியை அடைந்தது. இவற்றின் செலவையும் ஏற்பாட்டையும் புறக்கோட்டைத் தமிழ் வணிகர் ஏற்றனர்.


அதே நேரத்துக்கு, 15 அடி நீள இரும்புத் தண்டவாளம் இரண்டையும், அப்பொழுதே குழைத்த சீமெந்துக்கல் கலவையையும் கொண்ட சரக்குந்து ஒன்று கண்டிக்குளிப் பகுதியில் இருந்து வந்தது.

திரு. பிரான்சிசர், திரு. பேபி சுப்பிரமணியம், திரு. உமா மகேசுவரன் ஆகியோருடன் 45 அல்லது 50 இளைஞர் அங்கு கூடியிருந்தனர். திரு. உமா மகேசுவரன் அனைவருக்கும் திட்டத்தை விளக்கினார்.

காலைக் கதிரவன் எங்களை வரவேற்றான். பொது மக்கள் கூடினர். வீரகேசரி நிருபர் திரு. செல்லத்துரை இரவிரவாக அங்கு தங்கியிருந்தார். தொடர்ந்து சுருட்டுகளைப் புகைத்துக் கொண்டு, நிகழ்ச்சிகளைக் கவனமாகக் குறிப்பெடுத்தார். அவரிடம் முன்கூட்டியே நான் தெரிவித்திருந்தேன்.

11 அடி உயரத்தில் நினைவு நடுகல் எழுப்பினோம். அனைத்து மத வழிபாடு நடத்தினோம். சில நாள்களின்பின் இந்தத் தூணையும் அரச காவலர்கள் உடைத்து இழுத்துச் சாய்த்தனர். சாய்ந்த நிலையில் அந்த நினைவுச் சின்னம் ஓராண்டுக்காலம் அங்கிருந்தது.

திபி 2007 (கிபி 1976) மார்கழியில் ஆத்திரேலிய அரசின் அழைப்பில் வங்காளதேசம் சென்றிருந்தேன். நாடு திரும்பும் வழியில் காசிக்குச் சென்றேன். திரு. திருச்செல்வம் அவர்களின்



திபி 2043, 2044, 2045, 2046 (கிபி 2013, 2014, 2015, 2016) ஆண்டுகளில் சனவரி 10ஆம் நாள் நிகழ்வுகளுக்குத் தொடர்ச்சியாகச் சென்று வருகிறேன். தமிழீழ விடுதலைக் கழகத் தலைவர் திரு. தருமலிங்கம் சித்தார்த்தன் இந்த நிகழ்வுகளை ஒருங்கிணைத்து வருகிறார். நினைவு நடுகல் வாயிலில் தமிழீழ விடுதலைக் கழகத்தார் அமைத்த வளைவு உளது.



சாம்பலைக் கங்கையில் கரைத்தேன். சென்னையில் திரு. மணவைத்தம்பி அழைத்துச் சென்று கலைஞர் மு. கருணாநிதி அவர்களைச் சந்தித்தேன்.

இதனால் 10.01.1977இல் யாழ்ப்பாணத்துக்குச் செல்லமுடியவில்லை. ஒன்பது தூண்கள் கொண்ட நினைவு நடுகல் மீண்டும் எழுப்பிய நிகழ்வில் கலந்துகொள்ள முடியவில்லை. அன்றும் அனைத்து மத வழிபாடு நடைபெற்றது.

அக்காலத்தில் பிரதமர் திரு. பிரேமதாசா யாழ்ப்பாணம் வந்திருந்தார். நினைவு நடுகல் அமைந்த இடத்துக்குப் பிரதமர் திரு. பிரேமதாசாவை வழக்குரைஞர் திரு. பாலசுப்பிரமணியம் அழைத்துச் சென்றார். நினைவு நடுகல்லைப் புதுப்பிக்குமாறு யாழ்ப்பாணம் மாநகரசபையாருக்கு அவர் ஆணையிட்டார் என என்னிடம் வழக்குரைஞர் திரு. பாலசுப்பிரமணியம் கூறினார்.

திபி 2043, 2044, 2045, 2046 (கிபி 2013, 2014, 2015, 2016) ஆண்டுகளில் சனவரி 10ஆம் நாள் நிகழ்வுகளுக்குத் தொடர்ச்சியாக நான் சென்று வந்தேன். தமிழீழ விடுதலைக் கழகத் தலைவர் திரு. தருமலிங்கம் சித்தார்த்தன் இக்கால நிகழ்வுகளை ஒருங்கிணைத்து வருகிறார். நினைவு நடுகல் வாயிலில் தமிழீழ விடுதலைக் கழக வளைவு அமைந்துள்ளது.

திரு. க. உமாமகேசுவரன் திபி 2006 (கிபி 1975) இல் எனக்குத் துணையாக இருந்து தொடக்கிய பணி. அவர் தொடக்கிய அமைப்பினர் ஆண்டுதோறும் நினைவு நிகழ்வுகளை ஒருங்கிணைப்பது பொருத்தமானதே.

## யாழ்ப்பாண மாவட்ட நீதவானின்

## விசாரணை அறிக்கை

# INQUEST No. 3427

# VERDICT

The International Association of Tamil Research held its Conference in Sri Lanka at the Jaffna Town commencing on 3-1-1974. It concluded on 9-1-1974. Professor Vithiananthan of the Ceylon University was its President. Dr. K. Mahadeva and Mr. V. S. Thurairajah were the Joint Secretaries. Dr. K. Mahadeva was the General Secretary of the Conference.

The academic sessions concluded on 9-1-74. At these sessions a large number of foreign scholars participated. The affairs of the conference were managed at the Secretariat in No. 229, Main Street, Jaffna. On 29-12-1973 Dr. Mahadeva had discussed the full programme with the Honourable Prime Minister and an assurance was given to her by Dr. Mahadeva that there would be no political speeches at the meeting.

On 10-1-1974 it was decided by the organisers to have a public meeting to distribute awards to those who had participated in the cultural programme. This meeting was to have been held at the Municipal Open Air Theatre but according to witness Dr. Mahadeva it was held at the Veerasingham Hall because there were rains and the theatre was soggy and not suitable.

At 10.30 a.m. on 10-1-1974 Asst. Supdt. of Police Mr. Chandrasekara attached to the Jaffna S.P.s division, had telephoned the Joint Secretary Mr. V. S. Thurairajah and reminded him that the permission to hold the conference expired

on the 9th and advised him to obtain approval for the 10th Meeting. Mr. Thurairajah had requested Dr. Mahadeva to attend to this matter as he was not well. Dr. Mahadeva called on the Asst. Supdt. of Police at about 11.00 a.m. on 10-1-74. The Asst.Supdt. of Police had asked for a list of speakers. He was then referred of Mr. J. A. D. Ariyansinghe, the Superintendent of Police, Jaffna. The Supdt. of Police had requested him to make a written application giving the programme and a list of speakers. This was sent to the Supdt. of Police through witness Senthoor Selvan by Dr. Mahadeva. He had taken him of the S. P.s Bangalow at 2.00 p.m. The Supdt. of Police had given a verbal consent to the meeting.

The permit No. 54 was removed from A. S. P. Chandrasekara's office, according to him, by a messenger from the organisers. Mr. V. S. Thurairajah denied that a written permit was given at any stage to the conference. If that was the actual position it only shows the vast amount of mutual confidence that the police and the organisers had in each other. However, I cannot imagine permission being given by the Police without the conditions being on record. Since it was not conclusively shown that the permit had, in fact, reached either Dr. Mahadeva or Mr. Thurairajah, I ruled that the copy of it cannot be tendered as evidence. Nevertheless witnesses Mr. Chandrasekara, Mr. Ariyasinghe, Dr. Mahadeva and the Head Quarters Inspector are agreed that the understanding was that the meeting would be held at the Veerasingham Hall and that a person called Janarthanan would not be allowed to speak. Of course, there was the ovearall understanding that there would be no political speeches.

It may be observed at this stage that Mr. Janarthanan was a foreigner and was considered a 'security risk' to Sri Lanka. I did not have the benefit of an elaboration of this term, although I asked the police witnesses about it. He was wanted

 by the Criminal Investigation Department for questioning and according to Superintedent of Police Mr. Ariyasinghe, a notice was served on him on the evening of 10-1-1974 at the venue of the meeting itself by the Head Quarters Inspector Mr. Nanayakara requesting him to present himself before A. S. P. C. I. D. Immigration & Emmigration for questioning.

Dr. Mahadeva states that Janarthanan was not a delegate to the conference. He was neither an observer nor an invitee. He was, of course, present at the meeting on 10-1-1974. That his presence was a matter of grave concern to the police is very clear in that it was a repeated request by the police officers to the organisers that he should not be allowed to address the meeting of 10-1-74. A.S.P. Chandrasekara went so far as to say that it was requested that he should not be allowed to come near the platform.

The meeting of 10-1-74 commenced duly at about 6.30 p. m. at the Veerasingham Hall. It was presided over by the Secretary Mr. V. S. Thurairajah. Witness Dr. Mahadeva was the first speaker. He had thanked everybody and had thanked the police officers for their excellent co-operation during the time of the conference. At the very commencement of the meeting a section of the crowd at the rear of the hall had started disturbing the proceedings by demanding that the meeting should be held outside. The coufusion was such that Prof. Vithiananthan had expressed regret to Dr. Mahadeva that he had not presided and that there could have been better control of the crowd if he had done so. Dr. Mahadeva had tried to use "mass psychology" to control the disturbing elements whose clamouring had become more insistent. Messages were received from outside that the crowd was restive. Dr. Mahadeva said that it was feared that the crowd outside would break in and the meeting would be disrupted. The crowd had start-

ed battering the hall doors more frequently. Mr. Thurairajah too states that at about 8-00 p.m., "Half way through the proceedings we found it difficult to proceed with the meeting as the crowd was demanding that they should see and hear the delegates."

It was in this state of affairs, described as "chaotic" by witness Inspector Nanayakara who was present at that time outside the Hall, that the organizers decided to shift the venue to the outer compound of the Hall. The outer compound faces the entrance to the Hall. It is separated by a railing fence from the road. It is a grass reservation with a metal focus lamp post standing in the grass portion. The portion between the railings and the entrance could seat about hundred persons or with difficulity hundred and fifty persons on the grass. For the duration of the conference, a decorated 'pandol' described in Tamil as a 'sikaram' was erected outside the hall. This was intended to decorate the entrance. It was also illuminated by electric bulbs. This 'pandol' further restricted the space available for people to congregate between the entrance of this building and the railing fence.

According to Mr. Thurairajah, who incidentally was the architect who designed the Veerasingham Hall, the hall could accommodate a thousand persons and a further two hundred and fifty could be seated. There was loud agitation outside to have the meeting outside the hall and the "Outside arrangements were made very hastily". The platform was a makeshift one with only two tables. Mr. Rajarajeswaran, Attorney-at-Law in his evidence states that Prof. Vithiyananthan had expressed a fear that there would be sabotage at this stage and as a precaution microphone wires were brought overhead.

When the organizers came out of the hall having abandoned the meeting inside the hall, Inspector Nanyakara had

met the President and asked him what he was intending to do. Prof. Vithiananthan is stated to have replied, "What can I do?" Although Professor Vithiananthan in his evidence has omitted to say this, it rather reflects eloquently the helpless state in which the organizers found themselves at that time. Mr. Nanayakara further states that he apprised him of the conditions of the loud – speaker - permit and brought it to his notice that it was illegal and a violation of the permit. He had posed this problem to Mr. Thurairajah the Secretary, who was there but the latter had not commented on it. Witness Thuraiappah Sarveswaran, a sound operator of Rolex Electricals, states that he got orders at about 7.30 p. m. to institute the loudspeaker system,outside from Dr. Vithiananthan and he installed five (5) loud - speakers outside. There were loud - speakers on either side and on the 'pandol'.

The situation that presents itself after the meeting inside the hall was abandoned by popular demand, was the appearance of the very controversial person called Janarthanan. He was seen inside the hall at the closing stage of the meeting by Dr. Mahadeva. He was very near the platform. Then he was almost carried outside by other persons and was going with the organizers towards the venue of new meeting. At this stage, Mr. Nanayakara, had served a notice on Janarthanan as directed by the Superintendent of Police. Some youths had hoisted Janarthanan on the table. This was followed by thunderous applause and the crowed started converging towards the new platform. Inspector Nanayakara states that at this stage it appeared as if the organizers had lost control of the meeting. Dr. Mahadeva saw Janarthanan for the first time when Professor Vithinanthan had announced that the meeting would take place outside the Hall. He was near the stage with a crowd of admirers around him. The resumed meeting outside started at 8.00 p. m. according to Dr. Mahadeva. Dr. Mahadeva states

that he suddenly saw Janarthanan at this stage, on the platform and a group of about 20 admirers shouting slogans in his praise. Dr. Mahadeva realised that this would invite the intervention of the police, therefore, he requested Janarthanan to get down. Janarthanan's reply to this request is sigiificant. He is stated to have said, "If you ask me to get down your trouble will be more". Dr. Mahadeva reminded Prof. Vithiananthan of his undertaking given to police. Prof. Vithiananthan had asked Janarthanan to get down but he did not get down. Mr. Thurairajah too made an unsuccessful attempt to dislodge him. Mr. Amirthalingam who was requested to use his influnce to get him down had replied evasively, "We will wait and see." Dr. Mahadeva states that he and Mr. Thurairajah decided to bring the matter to the notice of the police and settle the matter with the A.S.P. Chandrasekara amicably to enable the meeting to go on. Mr. Thurairajah, when he was recalled in answer to court said that he did not share Mr. Mahadeva's apprehension that Janarthanan would speak. Dr. Mahadeva states that his fears were accentuated because Janarthanan was standing on the stage and talking in whispers to his supporters.

Advocate Rajarajeswaran states that Janarthanan was there and he exchanged garlands with advocate Amirthalingam when the platform was got ready. The crowd was applauding him. Advocate Amirthalingam did not mention this matter in his evidence at the inquest. In fact, even Dr. Vithiananthan did not mention anything about this tense situation that was developing. It may be that Dr. Vithiananthan and Mr. Thurairajah had thought that they could effectively handle it. But the fear had rooted itself firmly in Dr. Mahadeva's mind so much that he decided to avoid misunderstanding with the police. He left the meeting and tried to telephone A.S.P. Mr. Chandrasekara.

He did so by jumping over the wall of the Veerasingham Hall and using the telephone at the Regal Theatre, adjoining

 the hall. He did not contact the A.S.P. He was told that he had gone to the hall. Then he returned to the stage and found that Janarthanan was seated close to it. The meeting was proceeding and Professor Naina Mohomod was speaking on the platform. After about 10 minutes from the commencment of the speech police arrived at the spot. Their arrival was noticed by the witnesses who were near the stage. Their attention was attracted by the noise of the loud hailer used by the police. They were first seen between 50 and 75 yards of the platform. The people who were seated were standing up and the crowd was disturbed. No member of the public, who could depose to the matters immediately preceeding police intervention, gave evidence at the inquest. All the witnesses who gave evidence were at the crucial moment more or less near the platform which was about 75 yards from the place where the police entered the venue of the meeting. Most of them agreed that they heard the police loud - hailer. A. S. P. Chandrasekara was at the head of the police party. Inspector Nanayakara was also there. The party was led by Mr. Chandrasekara in a jeep fitted with a loud hailer. He was accompanied in the jeep by Inspector Nanayakara. They were followed by a heavy truck in which the members of the riot squad went. A group of 40 constables were marching behind the heavy truck. They were carrying batons.

A. S. P. Mr. Chandrasekara's evidence on this aspect is that Inspector Mr. Nanayakara informed him at about 8.30 p.m. that the crowd at the meeting was blocking the road and that a person of security interest was on the platform at the meeting. He therefore, wanted to go to the venue and get the organizers to ensure that order was maintained. He said that he could not go nearer as the entire area was crowded. He went to the station and came with a police party. He was already informed when he went on the first occasion that a

police constable was pelted with stone. When he went the second time he availed of the loud - hailer to clear the road. But strangely he was greeted with stones and bottles. This hail caused damage to property and persons. He had issued a warning of those engaged in stoning to stop doing so. He then ordered the gas party to use tear gas. The crowd which began to scramble away also turned hostile to the police. More stones and bottles were being thrown. He had ordered more tear gas to be used. After the crowd had dispersed, he took count of his men and found that two of them were seriously injured. They were sent to the hospital. He thereafter, proceeded to take further steps to prevent mob violence in the town area. He said that a bus was burnt that night and other government buildings were affected. He was later informed that seven persons had also died.

His version is supported by the evidence of Inspector Nanayakara. Mr. Nanayakara the Head Quarters Inspector at Jaffna states that he was in civil clothes at the meeting on 10-7-1974 at Veerasingam Hall. When the announcement was made that the meeting was to be held outside, he realised that the conditions regarding the holding of the meeting were being violated. He had also thought there would be a serious breach of peace because Janarthanan had come to the piatform. He promptly went and reported the situation to A. S. P. Mr. Chandrasekara. They had gone to the venue and found that meeting the organizers were difficult in the circumstances. They were afraid of some hostility to the police. They had then gone back to the police station and returned with reinforcement to clear the road and stop the meeting. After the melee he had seen two constables lying injured on the road and dispatched them to the hospital. He too had joined the mobile patrol and was trying to prevent acts of violence in the town. He was concerned about attacks on individual po-

licemen.

Police constable T. K. Ossen of the Jaffna Police who bore the number 11125 stated that he was one of the 40 persons who marched behind the heavy truck. He like the other marchers carried the baton. They were instructed to clear the road. He had heard the appeal from the loud hailer requesting the people to clear the road. Soon after, bottles and stones fell on them. One stone struck him and he had got dragged into the crowd. He said that he was deprived of his tunic and slouch hat and robbed of his Camy wrist watch. He had been in the General Hospital, Colombo for 24 days. His torn and blood stained tunic was produced at the inquiry.

Seargent Walter Perera of the Jaffna Traffic police stated that he had come on his mobile rounds on the Post Office side of Veerasingam Hall and found that there was obstruction on the road, by the people. He had turned back and reported the matter to his superiors at the police station. He had later come with the police party. He deposed to the fact that the police jeep was attacked and damaged.

Professor Vithiananthan, Mr. Thurairajah, Dr. Mahadeva, Mr. Amirthalingam, Mr. Navaratnam, Mr. Thillainathan and Mr. Sakthivel have spoken of the happenings outside the hall after the poilce intervened. Tear gas shells had dropped in front of the stage and all over the place where the meeting was held. The crowd had reacted in confusion. The people had stampeded. Many had lost their belongings; some including ladies and children had even lost their wearing apparel.

Advocate Mr. Rajarajeswaran gave his evidence in detail. He said that the police officers were among the crowd and threatened and chased them in all directions. Their confusion was so great and the inconvenience to the public was

of such magnitude that he had telephoned the President of Sri Lanka and requested him to look into the matter immediately. He had also remained at the spot till very early hours helping people out of their travail. Prof. Vithiananthan said he was the victim of the gas attack. A tear gas fell on the platform and he fell unconscious. Mr. Amirthalingam produced a teargas cannister which he stated he had picked up near the platform. Mr. V. N. Navaratnam stated that he has seen the police attack and he too was blinded by teargas. He produced a piece of police baton recovered at the spot. During the confusion that ensued after the police intervention seven persons lost their lives. They were found lying near the railing fence opposite the Veerasingam Hall.

They were picked up and taken to the Jaffna Hospital where Admitting Officer Dr. S. Senthilkumar said that all seven persons were dead on arrival.

The seven persons were:

1. Veluppillai Kesavarajah
2. Vaithiyanathan Yoganathan
3. Sinnathamby Nanthakumar
4. Sinnathurai Ponnuthurai
5. Sithambary Arumugam
6. Rajadurai Sivanathan
7. Paramsothy Saravanapavan

Dr. S. Subramanian, J. M. O. Jaffna held postmortem on the bodies of the deceased persons. His reports were produced in Court marked P4 to P10. He was of the opinion that all seven persons were electrocuted to death. He ruled out

the possibility of their being gassed to death. The doctor was questioned on the matter to eliminate the possibility of some or all of them dying as a result of excessive inhalation of tear-gas. External injuries on the body showed a combination of abrasive and electric burnt marks on the skin.

Evidence in regard to the location of the body of the dead persons at the place where they died is scanty. Mr. Thurairajah states that he saw some persons lying fallen. Witness Kailavasan, the Veerakesari photographer, who produced photographs taken at the spot at the time marked P13 to P15, said persons lay fallen near the railings and he took photographs of the persons who were there lying down. The evidence of witness Thillainathan shows that one the deceased Sinnathamby Nanthakumar was lying near the railings. He also states that other persons were lying near him. He had seen the railings fence collapsed. He pulled the deceased away from the place where he was lying with the aid of shawl. He took the deceased by a passing car to the hospital.

The question which looms large and which is of a vital nature is to decide whether the deceased persons were the victims of a malevolent design. One has to closely examine the evidence in regard to the source of electric current which caused the death. On this aspect the evidence unfortunately is nebulous. The chief difficulty that presents itself is that no one could speak to the actual state of affairs in regard to the electrical wires at the time of the incident.

Mr. Thurairajah, Mr. Thillainathan, Mr. Kailavasan who were at the spot where the bodies were lying near the railings say that they did not see the wires lying around. Investigation into the press photograph purporting to show a hanging wire drew a blank. The photographer produced enlargements showing that what was shown was a rope and not a hanging

wire, vide P13 and P13A. In fact witness Arasaratnam retracted from the position that it was a wire, when confronted with his photograph captioned as a hanging wire in the paper 'Thinapathi' marked and produced P16.

Mr. Rajaratnam, Attorney-at-Law says that he saw a masked police officer shoot and dislodge a microphone wire which fell in front of him. This witness was at a considerable distance away from the railing fence. He was near the western entrance gate of the Veerasingham Hall. A few feet in front of him are somewhat distant from the railing fence itself. Witness Thillainathan states that there was the Municipal van near the railings at a later stage. There was a ladder and a person was on the ladder. He did not go near the ladder as he was warned about live wires. The Municipal Electrical Superintendent Sivakadadchampillai said that at 11.30 p.m. on information received from Mr. Rajasooriar he rushed to the spot with linesman Velupillai and two other labourers. He had seen persons removing lamp holders and the wires at the stage. Witness Veluppillai, linesman of the Municipality, went to the spot with the Electrical Superintendent in a scavanging lorry. He had seen a metal pole on which focus lamps were fixed leaning. He denied that any ladder was used by them although the ladder was with them in the lorry. Witness Mr. Rajasooriar who was the first witness to speak on the electrocution at this inquest stated that he went to the venue of the meeting looking for his sons who had gone to attend the meeting. He had seen the metal pole leaning against the railings. There was a stick propped between the pole and the railings. Having found out that there was a leakage of current there he had informed the power house about it.

Mr. Sivakadachampillai the Electrical Superintendent of the Municipality said that he inspected the premises and saw that the trip - switch at Veerasingam Hall indicated that there

was no leakage of current from the Hall electrical system. If it was so, the trip - switch would have worked and stopped it. At the time he went to the venue, he found that the current on the railings were not of a high voltage. The current could not have caused instant electrocution. That was what he found at 11.30 p.m. that night.

Mr. J. M. York, Asst. Secretary to the Ministry of Irrigation and Power, gave evidence. He said that he examined the site of the electrocution on 23-1-1974 at the request of the Honourable Minister Mr. Maithrapala Senanayaka. He said that he could not ascertain how the electrocution occured. He surmised that the wires with faulty insulation could have fallen and caused the electrocution. He had found out from the Municipality that although private generators were used no permit was obtained for their use. The evidence of Mr. Pathinathan is that burnt ash fell on him. He saw it was burnt insulated wire. He was at the time near the railing fence. A police officer had according to him, fired a good number of shots into the air and a bomb like object was thrown at him by a police officer. He was electrocuted and survived a very harrowing ordeal. He had been in hospital for a long time in a state of shock and pain. The doctor spoke of his condition.

The question is whether live wires were dislodged by police firing. Mr. Rajaratnam and Mr. Pathinathan speak to such happening. Dr. Mahadeva too states that he heard rifle shots. One cannot definitely say whether bullets or tear gas shells were fired by mere sounds of shots alone. The S. P. Mr. Ariyasinghe states that he could vouch that not a single bullet was fired that evening. I accept his evidence unreservedly because he had checked on this matter specifically.

Whether the police officers who dislodged wires by firing shots at them did so with the intention to cause danger by

hanging live wires or whether they were accidently snapped, is a matter to be considered. The police officers according to every witness were running all over the venue of the meeting. Whether they acted with suicidal recklessness by dislodging wires where they themselves were moving about is a question that looms large. If causing death was their intention, I cannot imagine them wanting to do it in the manner by endangering themselves too. I hold that the wires, if any were dislodged, had snapped under accidental circumstances.

On the evidence led at this inquest, basing chiefly on the evidence of the doctor, I hold that the death occured as a result of accidental electrocution. The deceased persons had died of cardio - respiratory failure resulting from electrocution by a lethal voltage of current leakage at a point or points near the metal focus lamp post and the iron railing fence opposite the Veerasingham Hall. I now proceed to consider the question whether the police who intervened to clear the road were directly or remotely responsible for the electrocution of the persons who attended the meeting.

To review the conduct of the police on that occasion one has to study the evidence of the Superintendent of Police Mr. Ariyasinghe, the Asst. Supdt. of Police Mr. Chandrasekara and the H. Q. I. Mr. Nanayakara. I have set out the facts that preceded the meeting which relate to the obtaining of the permission to hold a meeting granted to the Secretary by the Superintendent. Document P14 is the written application made by Mr. Thurairajah to hold the meeting. On the reverse of P14 is a minute made by Chandrasekara A.S.P. stating that the loud - speaker permit was issued subject to the conditions that the meeting would be held inside the Veerasingham Hall and that the speakers mentioned in the application are the only persons who would speak and nobody is to make political speeches.

That the police had to intervene and stop the violation of any one or all the conditions laid down cannot be disputed. The organizers had thought that they were entitled to hold the meeting within the premises. The police do not seem to have thought so. Whether the meeting proper could be inside or outside the hall is a position distinct from using the public address system inside the hall. There does not seem to have been an argument on this matter. The organizers in not availing themselves of a written permit did not seem to have troubled very much on this matter. However, the police were alert to this matter and H. Q. I. Nanayakara had questioned the President in regard to this when the meeting was to be held outside and he acted on the footing that there was a violation of the permit to use the loud - speaker.

The next aspect is the permitting of persons who were not in the application to speak. This question seems to have been highlighted by the possible participation as a speaker of one person called Janarthanan. He did not in fact speak at the meeting before it was finally disrupted, but, that he was going to speak was an apprehension shared by the police and the organising secretary Dr. Mahadeva. I am led to believe that it was this imminent possibility that caused police intervention. The President Dr. Vithiananthan who was in charge of the proceedings was perhaps confident that it would not happen. But, whether the police shared that confidence, is to be answered in the negative. Janarthanan was seated on the platform, garlanded and vociferously applauded by a crowd of supporters and admirers. The police took the view that this was a prelude to his addressing the gathering.

The further question that arises is whether the police were justified in using teargas on that occasion. The police party was led by an A. S. P. He says that he went there to con-

tact the organizers about the violation of the permission given but his way was blocked by a crowd which turned spontaneously hostile when asked to clear the road.

The blocking of the road by itself seems to have been condoned by the police officers on duty at the meeting. Witness Mr. Kathiravetpilai said he was stopped from using the road where the people were seated by the officers on duty. But when the need arose to contact the organizers with the view of possibly stopping the meeting which was being held in a manner different from that which was planned by even the organizers, a prudent officer should be expected to anticipate hostile reaction. It should not be forgotten that it was the crowd who wanted this meeting to be held outside. The evidences of A. S. P. Mr. Chandrasekara and Mr. Nanayakara show that there was spontaneous hostility manifest at the very entry of the police. This section of the crowd may not have been reflecting the general feelings of the persons present. The organizers have in fact bestowed encomiums on the police even at the meeting held inside the hall that evening. Mr. Mahadeva had personally conveyed his gratitude to Mr. Chandrasekara and the S. P. on the 10th morning.

The final question that I propose to discuss is whether the chain of circumstances that led to the death of seven persons was started by any other agency. On all the evidence placed before me, I find that the meeting was disrupted as early as 7-45 p. m. by a section of the crowd - a crowd who could be vaguely identified as the persons who wanted Janarthanan to be on the platform. The first thing that meets the eye at the resumed meeting outside the hall is Janarthanan seated on the platform and garlanded. He warned the Secretary Dr. Mahadeva saying, "If you ask me to get down there would be more trouble."

The foreign delegates were attending the conference from 3-1-1974 to 9-1-1974. The crowd was quite familiar with them. It was not a crying demand to see them that day although the section which disrupted the meeting had used it as a slogan. Since the main purpose of this meeting, namely the distribution of awards, was over, I would have thought that the organizers would have stopped the meeting at that stage. Mr. York says that two persons have died the previous day in the procession. It was a tragedy relatable to reckless enthusiasm within the knowledge of the organizers themselves.

In the light of the tragic outcome of the whole incident, it would be easy to appear wise after the event and suggest that things could have been done in a different way. It is not within the scope of an inquirer to do so.

Whether the security risk of Janarthanan was so great as to necessitate police intervention is for proper authorities to decide because I cannot comment on matters pertaining to national security. The justification for police intervention is a matter for the person who knew the degree of risk involved in the participation of Janarthanan at a public meeting. If the police had acted with undue haste or lack of consideration in the context of the security risk involved, I trust the appropriate authorities would take suitable action to avoid a repetition of such a course of conduct. I cannot express an opinion on this matter because I am handicapped without an elaboration of the term "security risk" to be able to judge for myself whether the risk was such as to warrant a speedy and drastic action.

I further direct that the director of public prosecution be informed that there has been a contravention of Section II of the Electricity Act - Chapter 205 C.L.E. and recommend that suitable action be taken against the owner of generator that was in use at the premises on 10-1-1974.

Before parting with these proceedings I must place on record my deep gratitude for the full measure of co-operation extended to me by M/s. S. Nadarajah, S. Thambithurai and R. Visvanathan, Attorneys-at-Law who attended on every date of inquiry and suggested useful questions to clarify many difficult points that arose. I must also thank the special police team under the direction of S. P. Mr. Ariyasinghe, A. S. P. Pertus Perera and I. P. Pathmanathan who extended their full measure of co-operation and conducted a very thorough investigation into all possible aspects that should be explored into in an inquiry that has aroused a great deal of public interest.

(Sgd.) K. PALAKIDNAR
Magistrate, Jaffna.

# ஊ யாழ்ப்பாணக் குடிமக்கள் குழு விசாரணை அறிக்கை

1974 பெப்ரவரி 2, 4, 5, 12, 13 ஆகிய நாள்களில் யாழ்ப்பாணம் பாம்கோட் மண்டபத்தில் நடைபெற்ற விசாரணைக் குழுவின் அறிக்கை:

"அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்குச் சமூகமளித்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளைப் பாராட்டுமுகமாக யாழ்ப்பாணத்தில் வீரசிங்கம் மண்டப எல்லையில் 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்திலும், அதைத் தொடர்ந்த நாள்களிலும் நிகழ்ந்த சம்பவங்களைப்பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு" யாழ்ப்பாணப் பொதுமக்களால் நாங்கள் நியமிக்கப்பட்டோம்.

எங்கள் முன் சாட்சியம் அளிப்பவர்களின் வாக்கு மூலங்களிலுள்ள உண்மைகளை அறிந்து உறுதிப்படுத்துவதே எங்களின் வேலையாகும்.

சாட்சியங்களைத் தன்முன் சமூகம் அளிக்குமாறு பணிக்கவும், சம்பந்தப்பட்ட ஆதார மூலங்களைச் சமர்ப்பிக்கவும், ஒரு சட்டமன்றத்திற்குள்ள அதிகாரம் பொதுமக்களின் ஆணையால் அமைக்கப்பட்ட இத்தகைய விசாரணைக்குழுவுக்குக் கிடையாது. அதற்குப் பதிலாக இந்தச் சம்பவங்கள் பற்றிய விபரம் தெரிந்தவர்களை எங்கள்முன் சாட்சியம் அளிக்குமாறு இந்த விசாரணைக் குழுவின் செயலாளரால் ஆங்கில, தமிழ்த் தினசரிகளில் பிரசுரிக்கப்பட்ட அழைப்போடு நாங்கள் திருப்திப்பட வேண்டியதாயிற்று.

அந்த விளம்பரத்தைக் கண்ணுற்ற பெருந்தொகையானோர் சாட்சியம் அளிக்கச் சம்மதம் தெரிவித்துச் செயலாளருக்கு அறிவித்தனர்.

ஒரே சம்பவத்தைப்பற்றிப் பேசப் பல சாட்சியங்கள் தேவையில்லை என்பதை நடுநிலை வழக்கறிஞராகச் சேவை செய்த திரு. தம்பித்துரை அவர்களுக்குத் தெளிவாகச் சொல்லி யிருந்தோம்.

எங்களின் விசாரணைக்குட்பட்டவர்களில் யாழ்ப்பாணப் பொலிசாரும் சம்பந்தப்பட்டவர்கள் என்ற முறையில், ஒரு உயர்தரப் பொலிஸ் அதிகாரியை விசாரணையில் உதவச் சமூகந் கொடுக்குமாறு வேண்டி, பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்குக் கடிதம் எழுதும்படியும், அக்கடிதப் பிரதிகளைக் கௌரவ பிரதம மந்திரிக்கும், யாழ்ப்பாணப் பொலிஸ் மா அதிகாரிக்கும் அனுப்பும்படியும் காரியதரிசியைப் பணித்தோம்.

எங்களின் இந்த விசாரணையில், அந்தச் சம்பவங்கள் பற்றிய பொலிஸ் தரப்பு வாதத்தை எடுத்துரைத்து உதவி செய்ய எந்த அதிகாரியும் முன்வரவில்லை என்பதையிட்டு வருந்து கிறோம். பொலிஸ் தாக்குமளவிற்குக் கூட்டத்தினர் ஆத்திரம் ஊட்டும் செயல்கள் எதிலும் ஈடுபட்டனரா என்றறியச் சில சாட்சியங்களை விசாரணை செய்தோம். அத்தகைய செயல்கள் எதுவுமே நடக்கவில்லையென்று உறுதியாகத் தெரிவித்தனர்.

1974 ஜனவரி 10ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட அந்தக் கூட்டம் ஜனவரி 3ஆந் திகதியிலிருந்து ஜனவரி 9ஆம் திகதி வரை நடந்த அந்த மகாநாட்டின் பிரமாதமான முத்தாய்ப்புக் கூட்டந்தான் என்பது சாட்சியங்களிலிருந்து தெளிவாகிறது. அதை நாங்கள் முழு மனதோடு ஏற்றுக் கொள்ளுகின்றோம். அந்த மாநாட்டைக் கொழும்பில் ஏன் நடத்தக்கூடாது என்ற வாதப்பிரதிவாதங்களுக்குப் பிறகுதான் யாழ்ப்பாணத்தில் நடத்த முடிவுசெய்யப்பட்டது. ஆகையால், யாழ் நகர வாசிகள் பல விதத்திலும் அதுபற்றிய தங்கள் குதூகலத்தை வெளிப்படுத்தினர். யாழ்ப்பாணமும், சுற்றுப்புறக் கிராமங்களும் வெகு விமரிசையாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. களிபொங்கிய மனத்தோடு பல்லாயிரக்கணக்கானவர்கள் தின மும் மாநாட்டிற்கு வந்து போயினர்.

மாநாடு நாள்களில் நடந்தேறிய களியாட்ட ஊர்வலங்கள், கலாசார நிகழ்ச்சிகள் முதலியன சம்பந்தமாக ஒரு பரிசளிப்பு விழாவை 1974 ஜனவரி 10ஆந் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடத்துவதற்கென்றே முதலில் ஏற்பாடாகியிருந்தது. ஆனால் மாநாட்டிற்குச் சமூகமளித்திருந்த பிரதிநிதிகளின் உயர் மட்டக் கலைஞானக் கலந்துரையாடல்கள் நடந்த மண்டபங்களில் பொதுமக்கள் அனுமதிக்கப்படாததால் அந்தப் பிரதிநிதிகளைக் காணவும், அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்கவும் விரும்பிய பொதுமக்களின் ஆசைக்கு ஜனவரி 7ஆம் அல்லது 8ஆம் திகதியே அமைப்பாளர்கள் இணங்கினர்.

10ஆம் திகதிக் கூட்டத்திற்கு ஒரு புது அநுமதி பெற வேண்டுமென்றும், பேச்சாளர்கள் பெயர்களையெல்லாம் கொடுக்க வேண்டுமென்றும் பொலிஸ் உதவி மா அதிகாரி (ஏ. எஸ். பி.) சந்திரசேகரா சொன்னதின் பேரில் அவர் சொன்ன முறையிலேயே ஒரு மனு, கொடுக்கப்பட்டது.

தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்த இளைஞர் தலைவரான திரு. ஜனார்த்தனன் என்பவர் அந்தக் கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்றாமற் பார்த்துக்கொள்வதே பொலிஸின் நோக்கம் என்பது சாட்சியங்களிலிருந்து புலனாகிறது. ஜனார்த்தனன் மாநாட்டுப் பிரதிநிதியல்ல; அவரைச் சொற்பொழிவாற்றச் செய்வது அமைப்பாளரின் நோக்கமும் அல்ல. அந்த கட்டுப்பாட்டோடுதான் பொலிசார் கூட்டத்திற்கு அனுமதி அளித்தனர். 3ஆம் திகதியிலிருந்து 9ஆம் திகதி வரை நடந்தது போலவே, இந்தக் கூட்டத்திற்கும் பொலிசார் எழுத்து மூலமான அனுமதி வழங்கவில்லை. இரு தரப்பாரும் ஏற்றுக் கொண்டுள்ள விஷயத்திற்கு எழுத்து மூலமான அனுமதியைக் கேட்கவோ கொடுக்கவோ அவசியமில்லாத ஒரு கனவான்கள் ஒப்பந்தம் அஃது என்பது சாட்சியங்களிலிருந்து விளங்குகிறது. அமைப்பாளரிடம் பொலிசார் நல்லெண்ணங் காட்டி ஒத்துழைப்புக் கொடுத்தமைபற்றி மாநாட்டுத் தலைவராயிருந்த இலங்கைச் சர்வகலாசாலையைச் சேர்ந்த கலாநிதி வித்தியானந்தன் புகழ்ந்துரைத்து நன்றி தெரிவித்துச் சிறிது

நேரத்திலேயே இந்தச் சம்பவங்கள் நடைபெற்றிருப்பது வேதனைக்குரிய விந்தையாகும்.

9ஆம் திகதி பெய்த பெருமழையின் காரணமாக யாழ்ப் பாணம் திறந்தவெளி அரங்கில் நடைபெறவிருந்த 10ஆம் திகதிக் கூட்டத்தை வீரசிங்கம் மண்டபத்திற்கு அமைப்பாளர்கள் மாற்றிவிட்டனர். அவ்வாறு இடமாற்றம் செய்யும் பொழுது, கூட்டத்தின் அளவு எத்தகையதாயிருக்குமென்றோ, அல்லது உள்ளே நடக்கும் விஷயங்களை வெளியில் இருந்து ஒலி பெருக்கியிற் கேட்பதோடு திருப்தியடையாமல் மக்கள் உள்ளே வர விரும்புவார்கள் என்றோ அமைப்பாளர்கள் கருத் திற் கொண்டதாகத் தெரியவில்லை. அதனால் ஏற்கனவே நிறைந்திருந்த மண்டபத்தில் மேலும் மேலும் மக்கள் நெருங்கி யடித்துக் கொண்டு நுழைய ஆரம்பித்தவுடன், ஏதாவது செய்தாக வேண்டுமென்று அமைப்பாளர்கள் தீர்மானித்தனர். அன்று மழையில்லாததால் ஏற்கனவே அனுமதி பெற்றிருந்த திறந்த வெளி அரங்கில் மீண்டும் கூட்டத்தை நடத்தக் கடைசி நேரத்தில் முயற்சித்தனர். ஆனால் அரங்கின் கதவுகளைத் திறந்து விடுவதற்குப் பொறுப்பாளருக்கு அனுமதி பெற்றுக்கொடுக்க யாழ்ப்பாண மாநகரசபைத் தலைவரையும் ஆணையாளரையும் கண்டுபிடிக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. ஆகையால் கூட்டத்தை மண்டபத்தின் வெளியில், மண்டப எல்லைக்குள் நடத்துவதென்று தீர்மானித்து அவ்வாறே அறிவித்தலும் செய்யப்பட்டது. மக்கள் கூட்டம் அதைத் திருப்தியுடன் ஏற்று, வசதியாக இருந்து பார்க்கக்கூடிய இடங்களைத் தேடி அமர்ந் தனர். அம்முறையில் மண்டபத்திற்கு வெளியில் இருந்த வீதியிலும், வீதிக்கு அப்பாலுள்ள கோட்டை மதில்வரையுள்ள புல் வெளியிலும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை மக்கள் இடம் பிடித்து அமர்ந்திருந்தனர்.

அவ்வாறு கூட்ட நடவடிக்கைகளை மண்டபத்திற்கு வெளியிலே நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்த சமயம், அமைப்பாளர்கள் என்ன செய்ய உத்தேசித்துள்ளார்கள் என்று தலைமைப்பீடப் பொலிஸ் பரிசோதகர் திரு.

நாணயக்கார, கலாநிதி வித்தியானந்தனைக் கேட்டிருக்கிறார். அதற்கு அவர், கூட்டம் அதிகமாக இருப்பதால் மண்டபத்திற்கு வெளியே கூட்டத்தை நடத்த உத்தேசித்துள்ளோம் என்று சொல்லியுள்ளார். அதைப்பற்றிப் பாதகமில்லையென்றும், ஆனால், மக்கள் மேடையைச் சுற்றி வளைத்துக்கொண்டு நிற்காமல், உட்கார வைத்துவிட வேண்டும் என்றும் பரிசோதகர் சொல்லியிருக்கிறார். இவையெல்லாம் கலாநிதி வித்தியானந்தன் சாட்சியத்திலிருந்து தெரிய வருகின்றது.

அவ்வாறு மாற்றம் செய்யவேண்டியிருந்ததால், மண்டப வாசலில் ஒரு மேடை அமைக்கவேண்டியதாயிற்று. வெளியெல்லையில் இரும்புக் கிராதியருகில் இருபுறமும் மின்சாரத் தூண்களில் பொருத்தப்பட்டிருந்த ஒலி பெருக்கிகளுக்கு அந்த மேடையிலிருந்து ஒலிபெருக்கி இணைப்பும் செய்யவேண்டியதாயிற்று.

கூட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் சமயம், ஜனார்த்தனன் பல ஆர்வலர்களுடன் கைத்தட்டல்களுக்கிடையில் அங்கு வந்து அமர்ந்தார். வழக்கறிஞரும் முன்னாள் பாராளுமன்ற அங்கத்தவருமான திரு. அமிர்தலிங்கம் இவருக்கு மாலை அணிவித்தார். ஜனார்த்தனன் மேடைக்கு வந்து இரண்டு மூன்று நிமிடங்களில் கலாநிதி வித்தியானந்தன் அவரை மேடையிலிருந்து இறங்கிக் கொள்ளுமாறு வேண்டிக்கொண்டதும், அவர் இறங்கி மேடைக்குப் பின்புறம் அமர்ந்து வேண்டியவர்களுக்கு மாதிரிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஜனார்த்தனன் அங்கிருக்கும் பொழுது தலைமைப்பீடப் பொலிஸ் பரிசோதகர் திரு. நாணயக்கார அவரிடம் வந்து ஒரு பத்திரத்தைக் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொண்டு அவ்விடம் விட்டகன்றார். அதன் பின்பு திரு. நாணயக்கார அங்கு காணப்படவில்லை.

இடமாற்றத்தின் காரணமாக கூட்ட நடவடிக்கைகள் ஏறக்குறைய ஒரு மணிநேர தாமதத்திற்குப் பிறகு இரவு 8 மணி அளவில் மீண்டும் ஆரம்பமானபோது அங்கு ஏறத்தாழ 50,000 மக்கள் வரை குழுமியிருந்தனர்.

பிரதிநிதிகளில் முதல் பேச்சாளர், இந்தியாவிலிருந்து வந்திருந்த பிரபல தமிழ்ப் புலவரான கலாநிதி நயினார் முகம்மது என்பவராகும். அவர் தமிழ் மொழியின் எழில் பற்றியும் அதன் தொன்மை பற்றியும் தமிழ் மக்களின் பண்பாடு பற்றியும் பேசினார்.

தூய்மையான தமிழில் அவர் சொற்பொழிவாற்றியதை மக்கள் சுவாரஸ்யமாகக் கேட்டுக்கொண்டும் அவ்வப்போது கைதட்டிக் கொண்டுமிருந்தனர். அவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது இறீகல் படமாளிகைப் பக்கம் இருந்த மக்கள் மத்தியில் சிறிது அமளி ஏற்பட்டது. அது யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பக்கமாகும். அந்தப் பக்கக் கடைசியில் மக்கள் எழுந்து நகர ஆரம்பித்தனர். "அமைதியாயிருங்கள்" என்று கலாநிதி நயினார் முகம்மது கேட்டுக்கொண்டார். இச்சமயம் ஒரு ஜீப்பும் இரும்புத் தொப்பி அணிந்து ஆயுதம் தாங்கிய பொலிஸ்காரர்களைக் கொண்ட ஒரு ரக்கும் கூட்டத்தினரிடையே மெதுவாக முன்னேற முற்பட்டன. போகப் போகக் கூட்டம் மிக நெருக்கமாயிருந்ததால், ரக் வண்டி மேலே நகர முடியவில்லை. உடனே பொலீஸ்காரர்கள் வாகனங்களில் இருந்து இறங்கித் தங்கள் பாதையில் நின்றவர்களையெல்லாம் தாக்க முற்பட்டனர். பிறகு விரிந்து பரவி நின்றுகொண்டு தொடர்ந்து கடுமையாகத் தாக்கினர். மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். அதனால் ஒரு பெரிய நெரிசல் ஏற்பட்டு, ஒருவர்மேல் ஒருவராகவும் சைக்கிள் வண்டிகள் மேலும் மக்கள் விழுந்தனர்.

பொலிஸ் தாக்குதலிலிருந்து தப்பிக்கச் சிலர் அகழிக்குள்ளும் குதித்தனர். கண்ணீர்ப் புகையும், துப்பாக்கி வெடிகளும் நிலை அதிகப்படுத்தின. பலர் புகையில் தத்தளித்தனர். மேடை மீதிருந்த கலாநிதி வித்தியானந்தனும், திரு. ஜேம்ஸ் இரத்தினமும் மயக்கம் ஏற்பட்டு வீழ்ந்தனர். துப்பாக்கிச் சூட்டினால் மேலே சென்ற மின்சாரக் கம்பி அறுந்து விழுந்ததை இரும்புக் கிராதிக்குப் பக்கத்தில் நின்ற வழக்கறிஞர் திரு. இராசரத்தினமும், திரு. பத்திநாதரும் கண்டிருக்கின்றனர். திரு. பத்திநாதர் தன் கதையைச் சொல்லி, உயிர் தப்பி வந்த வேதனையை விளக்கினார். ஒரு பொலிஸ்காரர் ஒரு

 கண்ணீர்ப் புகைக் குண்டைத் தன்மீது வீசியதாகவும் அது வெடிக்கவில்லையென்றும், அதன் பிறகு அந்தப் பொலிஸ்காரர் துப்பாக்கியால் மின்சாரக் கம்பிக்குச் சுட்டதாகவும், அதனால் அவர் தன் நிலை இழந்ததாகவும் சொல்லியிருக்கிறார். இதனால் மற்றும் ஏழுபேர் இறந்துள்ளனர்.

ஒரு பிரபல தமிழ்ப் புலவரின் பேச்சை ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டிருந்த ஆண் பெண்கள் அடங்கிய ஒரு தற்காப் பற்ற கூட்டத்தினர்மீது பொலிசார் துப்பாக்கிகள், கண்ணீர்ப்புகை வெடிகுண்டுகள், குறுந்தடிகள், கேடயங்கள் எல்லாங் கொண்டு எவ்வித முகாந்தரமுமின்றிக் கண்மூடித்தனமாக ஏன் தாக்குதல் நடத்தினர் என்பதுபற்றி இச் சந்தர்ப்பத்தில் ஆராய விழைகின்றோம்.

வழக்கறிஞரும், தேசியப் பேரவை அங்கத்தினருமான திரு. கதிரவேலுப்பிள்ளையின் சாட்சியம் இவ்விடயத்தில் தெளிவு காட்டுகிறது. மக்கள் மேல் நடத்திய தாக்குதல் பற்றிக் கேள்விப்பட்ட அவர், அத்தாக்குதலை நிறுத்துமாறு பொலிஸ் மா அதிபரைத் தொலைப்பேசி மூலம் கேட்டிருக்கின்றார். அமைப்பாளர்கள் ஒரு குறிப்பிட்ட பெயர்வழியைப் பேச அநுமதிப்பதில்லையெனப் பொறுப்பேற்றிருந்தனர் என்றும் அதை மீறி அப்பெயர்வழியைப் பேசஅநுமதித்ததால் கூட்டத்தை நிறுத்தப் பொலிசார் தலையிட்டனர் என்றும், மக்கள் தடுத்ததால் பொலிஸ் பலாத்காரம் உபயோகிக்க வேண்டியதாயிற்று என்றும் மார்புச் சளியால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த பொலிஸ் மா அதிகாரி பதில் கூறியிருக்கின்றார்.

திரு. கதிரவேலுப்பிள்ளை தனக்கும் பொலிஸ் மா அதிகாரிக்கும் இடையில் நடந்த சம்பாஷணையை உள்ளது உள்ளபடியே கூறியிருக்கின்றார் என்பதிலும், ஜனார்த்தனன் அன்றைய தினம் சொற்பொழிவாற்றவில்லையென்பது சந் தேகமற நிரூபிக்கப்பட்டுவிட்டது என்பதிலும் நாங்கள் முழுத் திருப்தியடைந்துள்ளோம். ஜனார்த்தனன் பேசியதாக யாரோ தவறுதலான தகவல் கொடுத்திருக்கின்றனர் என்றே தோன்றுகின்றது. அந்தத் தகவல் உண்மையாவென்பதை

உறுதிப்படுத்திக்கொண்டிருக்க வேண்டியதுதான் முறையானதும் விவேகமானதுமான வழியென எங்களுக்குத் தோன்றுகிறது. எவ்வாறாயினும் கூட்டத்தைக் கலைக்க எடுத்த முடிவு, விளைவைப் பற்றிச் சிந்திக்காமல் முரட்டுத்தனமாகச் செயல் பட்டதென்று அபிப்பிராயப்படுகின்றோம். கூட்டத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள அநுமதியில் கண்டுள்ள கட்டுப்பாட்டை மீறியதாக அமைப்பாளர்கள் மீது பிறகு வழக்குத் தொடர்ந்து இருக்கலாம் என்று ஏனோ அந்த அதிகாரிக்குத் தோன்றவில்லை. அல்லது அதைக் கவனிக்காதது போல் விட்டுவிடும் சாமர்த்தியமான முடிவைக்கூட அவர் சிந்தனை செய்தவராகத் தெரியவில்லை. ஏனெனில், அவருக்குக் கிடைத்த தகவலின்படி, அமைப்பாளர்கள் ஒப்புக் கொண்டதை ஏற்கனவே மீறியதால் அதற்குப் பிறகு எடுக்கும் நடவடிக்கையால் எவ்வித பிரயோசனமும் இல்லை. இவையெல்லாவற்றையும்விட மிகமோசமான விடயம் என்னவெனில், கூட்டம் நிறுத்தப்பட்ட செய்தியை மக்களுக்கு அறிவித்த முறைதான். இரண்டொரு பொலிஸ்காரர்கள் மேடைக்குப் போய்ப் பேசியது யார் என்று தெரிந்து கூட்டத்தை நிறுத்துவதைத் தவிர வேறுவழியில்லையெனக் கண்டால், அமைப்பாளருக்கு உத்தரவிடுவதன் மூலம் கூட்டத்தைக் கலைக்குமாறு செய்ய ஏன் முயற்சி எடுக்கப்படவில்லையென்பது விளங்காத மர்மமாகவே இருக்கிறது.

சாட்சியங்களின்படி நாம் அறிவதென்னவெனில், பொலிசார் தங்களை முழு ஆயுதபாணிகளாக்கிக் கொண்டு ஜீப்பிலும், ரக்கிலும் வீதிவழியே வரும்பொழுது வீதியில் மக்கள் உட்கார்ந்திருப்பதால் வழி மறிக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றனர். ஆனால் அவ்வாறு வீதி முழுமையும் மக்கள் உட்கார்ந்திருப்பது அவர்களுக்கு முன்பே நன்கு தெரிந்த விடயம்தான். ஏனெனில், வீரசிங்கம் மண்டபத்தில் இருந்து பிரிந்து செல்லும் அந்த வீதியின் இரு மருங்கிலும் ஏற்கனவே பொலிசார் நிறுத்தி வைக்கப்பட்டு, அவ்வழியில் வாகனப் போக்குவரத்தைத் தடை செய்யவும், அந்த அடிப்படையில் வாகனங்களை நிறுத்தி வைக்கும் வசதி

 ஏற்பாடுகளும் அவர்கள் செய்துகொண்டுதான் இருந்தனர். இந்த வீதியில் மக்கள் அமர்ந்திருந்ததனால் ஒரு பகுதியிலுள்ள மணிக்கூட்டுக் கடைத்தெரு இவைகளுக்கும் மறுபகுதியிலுள்ள பொலிஸ் நிலையம், நகரமண்டபம், வாடி வீடு முதலியன வற்றிற்குமிடையே பொது வாசிகசாலை வழியும், மாவட்ட நீதிமன்றமும் இருப்பதால் வாகனப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏதும் ஏற்படாதென்பதையும் பி.5 என்ற சான்றிதழ் மூலமும் இடங்களை நேரிற் கண்டறிந்த முறையிலும் நாங்கள் தெரிந்து கொண்டோம்.

பொலிசார் பொலிஸ் நிலையப் பக்கமிருந்து அந்த வீதியால் வரும்பொழுது வழிவிடுமாறு அறிவித்தனர் என்பதும் ஓரத்தில் இருந்த மக்கள் ஒதுங்கினர் என்பதும் உண்மையே. பொலிசார் மண்டபத்திற்குக் கொஞ்சத் தூரம் வரைதான் வாகனங்களில் வரமுடிந்தது. அதற்கு மேல் கூட்டம் மிக நெருக்கமாக இருந்ததால் முன்னேற முடியவில்லை. கையொலிபெருக்கியில் அவர்கள் கூறியது பலருக்குக் கேட்கவில்லையென்பதும் அநேகருக்கு விளங்கவில்லையென்பதும் சாட்சியங்களிலிருந்து தெரிகிறது. அதை ஏற்றுக்கொள்ள வேண்டித்தான் இருக்கிறது. ஏனெனில், அத்தகைய கையொலிபெருக்கிக் கருவிகளில் வரும் ஒலி தெளிவில்லையென்பது எங்கள் அநுபவத்தில் நாங்கள் நன்கறிந்துள்ளோம். அத்துடன் இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கு முன்னமே ஒலி பெருக்கிகள் அமைக்கப்பட்டு மக்கள் அதன்மூலம் வரும் பேச்சில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தனர். பொலிசாருக்கு மேலும் நகர முடியாமல் இருந்ததை அதற்கப்புறம் அவர்கள் எடுத்த நடவடிக்கைக்குக் காரணமாகக் காட்டமுடியாது. அப்புறம் அவர்கள் எடுத்த நடவக்கைகள் பற்றி சம்பவத் தொகுப்பில் நாங்கள் முன்னமே குறிப்பிட்டுள்ளோம். அவைகளின் உண்மையையும் நாங்கள் ஏற்றுள்ளோம்.

எங்கள் முன் வந்த சாட்சியங்கள் தாங்கள் கண்டவை களையும், கேட்டவைகளையும் நேர்மையோடு சொல்ல முயன்றிருக்கின்றனர் என நாங்கள் ஏகமனதாக அபிப்பிராயப் படுகிறோம். அவர்களின் சாட்சியங்கள் உண்மையானவைதான்

என்பதையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளுகின்றோம். அந்தச் சாட்சியங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளும் அதே சமயம், கூட்டம் பிரமாண்டமானது என்பதையும், மேடை விளக்குகளும் வழக்கமான தெருவிளக்குகளும் எரிந்து கொண்டிருந்த இரவுவேளையென்பதையும் பல இடங்களிலிருந்து அந்தச் சாட்சியங்கள் அந்தப் பரந்த இடத்தில் எங்கெங்கு என்னென்ன நடந்தது என்பதையெல்லாம் பார்த்தோ கேட்டோ இருக்க முடியாது என்பதையும் நாங்கள் கருத்திற் கொண்டுள்ளோம்.

நிராயுதபாணிகளான மக்களின் மீது அன்று இரவு எந்த விதத்திலும் அவசியமற்ற பலாத்காரத்தைப் பிரயோகித்ததற்காகப் பொலிசாரே குற்றவாளிகளாகின்றனர் என்ற தவிர்க்க முடியாத முடிவுக்குத்தான் நாங்கள் வரவேண்டியவர்களாய் இருக்கின்றோம். பொதுத்துறையைச் சார்ந்த பொலிசார் மிகவும் இக்கட்டான சூழ்நிலையிலும் சாமர்த்தியமாக நடந்துகொள்ள வேண்டிய கடமைபற்றிய திறனாய்வில் அவர்கள் பின்தங்கியவர்களாய் இருப்பதையிட்டு நாங்கள் மிகவும் கவலை கொள்ளுகின்றோம். சாட்சியங்களிலிருந்து தெரிவதென்னவெனில் அன்று இரவு நடந்தது இவைகள் மட்டும்தான் என்பதல்ல.

பொலிசார் தங்களின் ஆயுத பலத்தோடு நகரைச் சுற்றி அலைந்து, சந்தித்தவர்களையெல்லாம் தங்களின் உரிமையுள்ள வேலைகளைச் செய்து கொண்டிருந்தவர்களையெல்லாம் திடீரென்று தாக்கியிருக்கின்றனர்.

இரவு 10 மணியளவில் திரு. பேரின்பநாயகம் தன் மனைவி மக்களைக் கூட்டி வரப் பொலிஸ் நிலைய வீதி வழியாக யாழ்ப்பாண வாசிகசாலைப் பக்கம் மோட்டார் வாகனத்தை ஓட்டிச் செல்லும்பொழுது பொலிசார் துப்பாக்கி முனையால் அடித்திருக்கிறார்கள். நல்லவேளையாக அது கதவிலும் மோட்டார் வாகனத்தின் பின்பகுதியிலும் ஐந்தாறு தடவை பட்டு மோட்டார் வாகனத்துக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. எங்கள் சோதனைக்காகக் கொண்டுவரப்பட்ட மோட்டார் வாகனத்தை நாங்கள் பார்வையிட்டோம்.

தங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காகப் பஸ் நிலையத்திற் காத்துநின்ற மக்கள்மேல் கண்ணீர்ப்புகை பிரயோகப்படுத்தப் பட்டிருக்கிறது.

இருபத்தைந்து அல்லது முப்பது பொலிசார், யாழ்ப்பாணப் பிரதான வீதியில் பொன்னையா விநாயகமூர்த்தியை அடித்து அவரின்மோட்டார்சைக்கிளின்சக்கரப்பாதுகாப்புத்தகட்டையும் மின் விளக்குக் கண்ணாடியையும் சேதப்படுத்தியிருக்கின்றனர்.

இரவு 930 மணியளவில் என்ஜினியர் திரு. தவராஜாவைத் தாக்கியிருக்கின்றனர். வீரசிங்கம் மண்டபத்திலிருந்து ஒரு மைலுக்கு அப்பாலுள்ள டாக்டர் பிலிப்ஸ் பணிமனையருகில் ஒரு ரக்கும் ஜீப்பும் வந்து நிற்பதை அவர் பார்த்திருக்கிறார். அதிலிருந்து பத்து அல்லது பன்னிரண்டு ஆயுதந் தாங்கிய பொலிசார் கீழே குதித்து, அவரை நையப் புடைத்திருக்கின்றனர். அவர் தன் உணர்வு இழந்து மீண்டும் ஆஸ்பத்திரியில்தான் சுய உணர்வு பெற்றிருக்கின்றார். தவராஜா வீரசிங்க மண்டபக் கூட்டத்திற்குச் சென்றவரல்லர். தன்னைத் தாக்குவதற்குமுன் பொலிசார் கற்களை எறிந்தனரென்றும் கண்ணாடிகள் உடையும் சத்தத்தைக் கேட்டதாகவும் கூறியிருக்கிறார்.

றியோ ஐஸ்க்கிறீம் கடையின் சேதத்தை நாங்கள் பார்வையிட்டோம். அந்தக் கடையின் முன் கண்ணாடிகளைப் பொலிசார் அடித்து உடைத்ததாகச் சாட்சி ஆர்னல்ட் கூறியிருக்கிறார்.

பத்து அல்லது பதினைந்து பொலிஸ்காரர்கள் ஒரு ரக் பின் தொடரக் குறுந்தடி, துப்பாக்கி, கேடயங்களோடு போய் யாழ்ப்பாணப் பிரதான வீதியில் விநாயகமூர்த்தியின் மோட்டார் சயிக்கிளைச் சேதப்படுத்தியதையும், ஒரு சவ அடக்க நிலையக் கண்ணாடி யன்னல்களை உடைத்ததையும் தெருவிலிருந்த அலங்கார பல்புகளையும் தெரு விளக்குகளையும் சேதப் படுத்தியதையும் கண்டதாகவும், ஓர் அதிகாரி, *"முட்டாள்களே வான்(van)உக்குள் ஏறுங்கள்"* என்று உத்தரவிட்ட பிறகும் அவ்வாறு செய்ததாகவும், இமானுவேல் இராஜசிங்கம்

சாட்சியம் கூறியிருக்கிறார்.

கஸ்தூரியார் வீதியும் ஸ்டான்லி வீதியும் இணையும் சந்தியிலுள்ள பெற்றோல் நிலையத்துக்குக் காவலாளியான ஞானேஸ்வரன், ஆஸ்பத்திரியில் ஐந்து நாள்கள் இருந்து வந்த சீதாலட்சுமி தங்கராஜா, பெருமாள் விஜயராஜ் இன்னும் பலரும் வீரசிங்கம் மண்டபத்திலிருந்து வெகு தூரத்தில் பொலிசாரால் தாக்கப்பட்டதாகச் சாட்சியம் கொடுத்துள்ளனர்.

அந்தத் துக்ககரமான நாளான 10ஆம் திகதிக்கு இருதினங் கழித்து அதிகாலை விடிவதற்குமுன் யாழ்ப்பாணத்திலிருந்து பல மைல்களுக்கு அப்பாலுள்ள இணுவிலில் ஒரு ரக்கி லிருந்து பொலிஸ்காரர்கள் இறங்கி ஒரு சைக்கிள்காரரையும், தொழிற்சாலைக்குப் போய்க் கொண்டிருந்த சிமெந்துக் கூட்டுத் தாபனக் காவலாளியையும் தாக்கியதாகவும் சாட்சியங்கள் இருக்கின்றன. கந்தையா என்பவர் மூன்று பொலிஸ்காரர்களால் எசித் தாக்கி விரட்டப்பட்டதாகவும், அவர் தன் நிருவாக அதிகாரியிடம் முறையிட, அந்த அதிகாரி விஷயத்தை அரசாங்க அதிபருக்குத் தெரிவித்துள்ளார்.

கூட்டத்தின் மீது பொலிசார் தாக்குதல் நடத்திய சமயம் கூட்டத்தினர் எவ்வித எதிர்ப்பும் காட்டவில்லை யென்றும் திருப்பியும் தாக்கவில்லையென்றும் எங்கள் முன் வாக்குமூலம் அளித்தவர்கள் சர்வ நிச்சயமாகச் சொல்லி யிருக்கின்றனர். நீதிபதி முன் பொலிஸ் தரப்பார் கூறி யிருப்பது போல, பொலிசார் மீதோ வாகனங்கள் மீதோ கற்களோ போத்தல்களோ வீசப்படவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த சம்பவத்திற்குப் பிறகு வெகுநேரம் சென்று ஒரு பொலிஸ்காரர் தாக்கப்பட்டுத் திறந்தவெளி அரங்கின் அருகிலுள்ள ஒரு நீர்த்தேக்கத்தில் வீசப்பட்டாரென்றும், சில இளைஞர்கள் கூடி இரு பொலிஸ்காரரைத் தாக்க முற்பட்டபொழுது தடுக்கப் பட்டனரென்றும் சாட்சியங்கள் உண்டு. அந்தப் பேரச்சம் மிகுந்த இரவில் நிகழ்ந்த உயிரிழப்புகளையும் உடற்காயங்களையும், ஆண்களும் பெண்களும் அடைந்த அவமானங்களையும்

சிந்தித்துப் பார்த்த இளைஞர்களுக்குப் பதிலடி கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் எழுவது இயற்கையே. ஒருவேளை அதற்குப் பின்னும் இங்கு வந்த சாட்சியங்களுக்குத் தெரியாத பல பதிலுக்குப் பதில் சம்பவங்கள் நடைபெற்றிருக்கக் கூடும். அப்படியெல்லாம் இருந்திருப்பின் பொலிஸ் இங்கு சாட்சியங்கள் கொடுத்திருக்கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்ய விரும்பவில்லை.

ஒரு பாவமும் அறியாத பலர் காயமடைந்தும் பொருள் இழந்தும் உயிர் இழந்தும் அல்லலுற்றது அந்தப் பொலிஸ் அதிகாரியின் முற்றும் பிழையான மதியற்ற தீர்மானத்தின் சங்கிலித்தொடர் நிகழ்ச்சிகளேயாகும் என்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

நிராயுதபாணிகளும் நிரபராதிகளுமான குடிமக்கள் மீது பொலிசார் நடத்திய இந்தத் தாக்குதலுக்கு எந்தவிதமான முகாந்திரமும் எங்களாற் காணமுடியவில்லை. மக்களையோ பொருளையோ காப்பாற்றவேண்டிய எதிர்பாராத சந்தர்ப்பங்கள் தவிர மற்ற நேரங்களில் பொலிசார் பலாத்காரம் பிரயோகிக்க எவ்வித நியாயமுமில்லை. அதுவும்கூட எவ்வளவு குறைந்த அளவோ அவ்வளவே பிரயோகிக்கலாம். தவறு செய்பவர்களைத் தண்டிப்பது பொலிசின் வேலையல்ல. அது சட்டமன்றங்களின் பொறுப்பாகும். பொலிஸ் பகுதியில் பொதுஜன நம்பிக்கை ஏற்பட வேண்டுமெனில் பொது மக்களைப் பொறுத்துப் பொலிசாரின் கடமைகள் என்னவென்பதை அவர்களுக்கு அறிவுறுத்துவதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் பொலிஸ் சேவைக்குப் பொறுப்பானவர்கள் எடுத்துக் கொள்ளுதல் நலமென்று எங்களுக்குத் தோன்றுகிறது. ஏனெனில் தங்களுடையது ஒரு பொலிஸ் சேவையே தவிர பொலிஸ் படை அல்லவென்பதைப் பொலிஸ்காரர்களே உணர வேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்டம், தென்மராட்சிப் பிரிவு, மறவன்புலவு என்ற சிற்றூரைச் சேர்ந்தவர்.



மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாசாலை (1945-1948), யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (1949-1959) மற்றும் சென்னை பச்சையப்பன் கல்லூரி (19591-966) மாணவர். அறிவியல் முதுவல் - விலங்கியல், (சென்னைப் பல்கலை, 1966), கலை முதுவல் - தமிழ், (சென்னைப் பல்கலை 1992). இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் (1963-1964), இந்திய அரசு (1964-1966), யப்பானிய அரசு (1969), யுனெஸ்கோ (1973), ஆஸ்திரேலிய விஞ்ஞானச் சங்கம் (1976) ஆகியவற்றின் புலமைப் பரிசில்கள் பெற்றவர்.

எழுத்தர், இலங்கை அரசு (1963), யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரிப் பிரிவு விரிவுரையாளர் (1966), உள்ளூராட்சி அமைச்சர் மாண்புமிகு மு. திருச்செல்வம் அவர்களின் தனிச்செயலாளர் (1966), கொழும்பு கடற்றொழில் ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வு அலுவலர் (1967-1977), உடுவில் மகளிர் கல்லூரி உயிரியல் ஆசிரியர் (1977), யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விலங்கியல் விரிவுரையாளர் (1978-1979), 23 நாடுகளில் ஐ. நா. உணவு வேளாண் நிறுவன ஆலோசகர் (1971, 1979-1985). யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சென்னை மற்றும் தமிழகத்தின் 24 இடங்களில் காந்தளகம் வணிகப் பெயரில் பதிப்பக மற்றும் விற்பனை நிலையங்கள் அமைத்தவர் (1977 முதலாக). இருப்பிலும் விற்பனைக்குமுள்ள 50,000உக்கும் கூடுதலான தமிழ்த் தலைப்புகளைத் தன்னகத்தே கொண்டு 62 நாடுகளில் வாடிக்கையாளருக்குத் தமிழ் நூல்களை விற்பனை செய்யும் உலகின் மிகப் பெரிய மின்னம்பலத் தமிழ்நூல் அங்காடியை www.tamilnool.com (1999) அமைத்தவர்.

இலங்கை இந்து இளைஞர் பேரவைத் தலைமைச் செயலாளர் (1971-1977), யாழ்ப்பாணம் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுத் துணைச் செயலாளர் (1973-1975), தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுத் தொடக்கச் செயலாளர் (19771-979, 1987-2001), தமிழர் விடுதலைக் கூட்டணிப் நடுவண்குழு உறுப்பினர், (1977-1979, 1986-1989), தமிழர் பொருளாதார இயக்கச் செயலாளர் (1977-1979), அறவழிப் போராட்டக் குழு நிறுவனர் (1979), சீசெல்சு இந்துக் கோயில் சங்க நிறுவனர் (1984), அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளைத் துணைத் தலைவர் (1986), சிதம்பரம், தவத்திரு ஆறுமுகநாவலர் அறக்கட்டளை உறுப்பினர் (1987-1990), உலக அமைதிப் படையின் இலங்கைத் திட்டத்துக்கான ஆலோசகர் (1995), இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நடுவண் குழு உறுப்பினர் (2014 முதலாக).

இலங்கை இந்து இளைஞர் பேரவை கொடிநாள் அமைப்பாளர் விருது (1973), சிறந்த பதிப்பாளருக்கான சென்னைத் தலைநகர்த் தமிழ்ச் சங்கப் பாவேந்தர் நூற்றாண்டு விழா விருது (1992), புதுதில்லி நஷனல் புக் டிரஸ்டின் தமிழில் சிறந்த புத்தகக் காட்சியாளருக்கான மதுரைப் புத்தகக் காட்சியில் விருது (1993), சிறந்த பதிப்பாளருக்கான உலகத் திருக்குறள் மைய விருது (1993), பெரியபுராணம் சூசனம் (ஆறுமுகநாவலர்) பதிப்பிற்காக மலேசியா சைவ சித்தாந்தக் கழகப் பாராட்டிதழ் (1994), சிறந்த பதிப்பாளருக்கான சென்னைக் கம்பன் கழக மர்ரே ராஜம் விருது (1996), சிறந்த பதிப்பாளருக்கான மதுரைத் திருவள்ளுவர் சங்க விருது (1997), சிறந்த நூற் பதிப்பிற்கான திருப்பூர்த் தமிழ்ச் சங்க விருது (2000), திருமுறைப் பதிப்புப் பணியைப் பாராட்டித் திருமந்திர மாநாட்டில் சென்னை தெய்வத் தமிழ் அறக்கட்டளையினரின் விருது (2000), திருவாவடுதுறை ஆதீனச் சிவத்திருத் தொண்டர் விருது (2006), க. ப. அறவாணன் அறக்கட்டளையின் சாதனையாளர் விருது (2008), திருமுறைகளை மின்னம்பலத் தளத்தில் அமைத்த பணிக்காகச் சிங்கப்பூர்த் திருமுறை மாநாட்டுக் குழுவினரின் பாராட்டும் விருதும் (2010), சிறந்த பதிப்பாளருக்கான தில்லித் தமிழ்ச் சங்கத்தின் விருது (2010), சிறந்த நூற் பதிப்பிற்கான மணிவாசகர் பதிப்பக விருது (2011), மின்னம்பலத்தில் திருமுறைகளை அமைத்தமைக்காக உலகச் சைவப் பேரவையின் ஆஸ்திரேலியக் கிளை வழங்கிய பாராட்டும் விருதும் (2012), சுவாமி தயானந்த சரஸ்வதியின் ஆகர்ஷ வித்தியா குருகுலத்தாரின் பாராட்டும் விருதும் (2012), கோவைக் கற்பகம் பல்கலைக்கழகத்தின் மதிப்புறு முதுமுனைவர் பட்டம் (2013), காரைக்குடி கம்பன் கழகத்தார் தமிழ்த் தாய்க் கோயிலில் பரிவட்டப் பாராட்டும் முடிசூடல் விருதும் (2013), மலேசியா இந்து சங்கத்தின் சங்கரத்தினா விருது (2013), யாழ்ப்பாணம், தென்மராட்சிக் கல்வி வலையத்தின் அறிஞர் விருது (2013), தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் 37ஆவது சென்னைப் புத்தகக் காட்சியில், 30 ஆண்டு கால பதிப்புப் பணியைப் பாராட்டி விருது (2014), சென்னை, சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றத்தின் சாதனைச் செம்மல் விருது (2014), தென்மராட்சிப் பிரதேச கலாசாரப் பேரவையின் கலைச்சாகரம் விருது (2015), நம்மோடு வாழ்ந்து வரும் 24 தமிழ்ச் சான்றோர்களுள் 8ஆவது சான்றோராகத் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தாரின் பாராட்டு (2016), வடமாகாண முதலமைச்சர் விருது (2016) என்பன பெற்றவர்.

பறவைகளே (1981), தமிழர் கால்வாய் (2007), கப்பல் ஓட்டுவோம் கால்வாயில், (2007) என்பன இவர் அறிவியலில் எழுதியன. இவரது அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளில் பல, ஆங்கிலத்திலும் வேறு மொழிகளிலும் (தமிழ், யப்பான், அரபு, பிரஞ்சு, சுவாகிலி) வெளியாகியுள. இலங்கை நிலவரை (1995), உலகம் நிலவரை (2003), திருநெல்வேலி மாவட்ட நிலவரை (2000), உலகெங்கும் தமிழர் வரைபடம் (2006) ஆகியனவற்றின் பதிப்பாசிரியர். எனது யாழ்ப்பாணமே (1982) தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தோர் ஆகிய நூல்களின் ஆசிரியர், சிங்கள வரலாற்று நூல்களின் நம்பகத்தன்மை (2002) நூலின் இணை மொழிபெயர்ப்பாளர்.

யாழ்ப்பாணம் ஈழநாடு, உதயன், கொழும்பு வீரகேசரி, தினகரன், சுதந்திரன், தினக்குரல், டெயிலிநியூஸ், சென்னை தினமணி, தி இந்து, ஜனசக்தி, தமிழ் ஓசை, அமுதசுரபி, கோலாலம்பூர் மலேசிய நண்பன், பாரிஸ் ஈழநாடு, என உலகளாவிப் பல்வேறு அச்சு ஊடகங்களில் கருத்துருவாக்கக் கட்டுரைகள் எழுதுபவர். சென்னைப் பண்பலை வானொலிகள், இலங்கை வானொலி, உருபவாகினி, தமிழகத்துப் பொதிகை, சன், ஜெயா, மக்கள், புதிய தலைமுறை, ஆஸ்திரேலிய, ஐரோப்பிய, வட அமெரிக்கத் தொலைக்காட்சிகள் ஆய காணொலி ஊடகங்களில் அறிவியல் மற்றும் அரசியல் பரப்புரையாளர்.

தருமை ஆதீனப் பன்னிரு திருமுறைப் (18,900 பக்கங்கள், 16 பகுதிகளாக) பதிப்பின் அச்சிடல் தயாரிப்பார் (1996-2010). முருகன் பாடல் (4,800 பக்கங்கள்), தேவாரத் திரட்டுகள், திருமுறை கையடக்கப் பதிப்புகள், அபிராமி அந்தாதி, பிள்ளையார் கதை, திருக்குறள் போன்ற சைவ சமய நூல்களின் வெளியீட்டாளர்.

காந்தளகம்

பன்னிரு திருமுறையின் 18,246 பாடல்கள் அனைத்துக்கும் உரையுடனும் ஆங்கில மொழிபெயர்ப்புடனும் இசையுடனும், சமகாலத்தில் தமிழிலிருந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம், சிங்களம், தேவநாகரி, அரபி, தாய்லாந்து, பர்மியம், யப்பான், ஆபிரிக்கான்சு, கிறியோல், பிசின், மலாய், இந்தோனேசியன், சுவாகிலி, உருசியன், ஒலிக்குறி உரோமன், ஆங்கிலம் ஆய வரிவடிவங்களுக்கு ஒலிபெயர்ப்புடனும், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சிங்களம், இந்தி,